VISIT…

நின்னையே
ரதிஎன்று

நூல் விவர அட்டவணை

நூல் தலைப்பு	:	நின்னையே ரதி என்று...!
ஆசிரியர் பெயர்	:	ரமணிசந்திரன்
மொழி	:	தமிழ்
உரிமை	:	ஆசிரியருக்கு
முதற் பதிப்பு	:	அக்டோபர், 1988
இரண்டாம் பதிப்பு	:	ஏப்ரல், 1991
மூன்றாம்பதிப்பு	:	ஜூலை, 1992
நான்காம்பதிப்பு	:	அக்டோபர், 1993
ஐந்தாம் பதிப்பு	:	நவம்பர், 1994
ஆறாம் பதிப்பு	:	ஏப்ரல், 1996
ஏழாம் பதிப்பு	:	மே, 1997
எட்டாம் பதிப்பு	:	ஜனவரி, 1999
ஒன்பதாம் பதிப்பு	:	டிசம்பர், 2000
பத்தாம் பதிப்பு	:	ஏப்ரல், 2002
அச்சின் தன்மை	:	11.6 வெள்ளைத்தாள்
அச்சின் அளவு	:	1 X 8 கிரவுன்
எழுத்து அளவு	:	10 புள்ளிகள்
மொத்தப் பக்கங்கள்	:	104
கட்டுமானம்	:	சாதா அட்டை பைண்டு
வெளியீடு	:	**அருணோதயம்** 5/3, கொடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014.

விலை ரூ.25.00

பிரிண்டர்ஸ்	:	சேகர் ஆப்செட் பிரஸ் சென்னை - 600 005.

நின்னையே ரதி என்று...!

நின்னையே ரதி என்று...!

அவசரமாக உள்ளே ஓடிவந்து ஒரு தம்ளரில் தண்ணீரை எடுத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள் வித்யா.

நாற்காலியில், சோபா எல்லாவற்றிலும் சிறிய நகப்பனாருடைய பிள்ளைகள். பள்ளிக்கும் கல்லூரிக்குமாக அவசரமாகக் கிளம்பியதன் அடையாளங்கள் தெரிந்தன.

எதையும் ஒதுக்கி,உட்கார நேரமில்லாமல் சட்டென தரையில் அமர்ந்து தண்ணீரை வேகமாக அருந்தினாள்.

ஏதோ தோன்றவும் லேசாக விழிகளை மட்டும் திருப்பிப் பார்த்தாள்.

சிற்றன்னை தான் முகத்தில் கேலி இழையோட கதவில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தார்.

வித்யா பார்ப்பதை அறிந்து உதட்டில் சிரிப்புடன் உள்ளே வந்து, "பார்த்து, வயிறு வெடித்து விடப் போகிறது. எத்தனாவது தம்ளர்?" என்றாள் இண்டலாக சரசுவதி.

முகம் சிவந்த போதும், "இரண்டாவதுதான்" என்று ரோஷமாக இயம்பிய வித்யாவின் குரல் சட்டென தணிந்தது. 'சித்தி..." என்று அழைத்தாள் வெகு வினயமான குரலில்.

"என்ன?" என்று எடுப்பாகக் கேட்டு விட்டு, ஒரு சோபாவில் கிடந்த டீ-ஷர்ட்டை எடுத்துப் பார்த்து

மூக்கைச் சுருக்கிக் கொண்டு அதை அடுத்த இருக்கையில் விலிவிட்டு அமர்ந்தான் சரகவரி.

"வந்து சித்தி... கொஞ்சம் வாருங்கள் சித்தி. ப்ளீஸ் சித்தி," என்றாள் வித்யா கெஞ்சலாக.

சலிப்புக் காட்டினாலும் அந்த அம்மாவின் முகம் இளகிவிட்டது. "என்ன பெண்ணடி நீ. ஒன்று இரண்டு என்று இல்லாமல் ஒரு டஜன் பூனை வளர்க்கிறார்கள் எதிர் வீட்டில். இங்கே இருந்துகொண்டு இளம்பும்போது எதிரே பூனை வந்துவிட்டது என்று சகுனம் பார்ப்பதும், அதைச் சமனப்படுத்த தம்பர் கணக்கில் தண்ணீர் குடிப் பதும்... இப்படி பயந்து பயந்து... சரி சரி நேரமாகி விட் டது இளம்பு." அலுத்துக் கொண்டாலும் எழுந்து மடமட வென்று வாசலுக்கு வெளியே சென்றாள்.

"ரெடியா?"

"ரெடி சித்தி" என்று வேகமாக அவள் வெளியே ஓடி வந்தாள்.

நல்ல சகுனமாய் குடும்பப் பெண்ணான சித்தன்னை எதிரே வர, அவளைக் கடக்கும் ஒருகணம் தாமதித்து, அவளது தோளைத் தடவி, "என் தங்கச் சித்தி" என்று மொழிந்துவிட்டு ஓடினாள்.

புன்னகையோடேயே தோளைக் குலுக்கிவிட்டு உள்ளே சென்றாள் அந்த அம்மாள்.

ஆனால் வித்யா எப்போர்ப்பட்ட நல்ல சகுனத்தைத் துணை சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறாள் எனபதில் சற்றும் பயம் கொள்ளாமல் பஸ் லேட்டாகவே வந்து தொலைத்தது.

அவசரமாக பஸ்ஸில் ஏறி நின்றவளுக்கு நிற்கமாட்டா மல் பரபரவென்றது.

இந்த பஸ் இப்படி ஆமையாய் ஊர்கிறதே. ஒன்பதரைக்குத் தொடங்கும் அலுவலகத்துக்கு எப்போது

போய்ச் சேர்வது? இப்போதே மணி ஒன்பதேகால் ஒழுங் கான வேகத்தில் போனாலே போய்ச் சேர முக்கால் மணி நேரம் ஆகும்... இந்த பஸ்காரனோ சக்கரத்துக்குப் பதிலாக நத்தையை வைத்து முடுக்கி விட்டிருக்கிறார்கள்...

எல்லாம் இந்த எதிர்வீட்டுப் பூனைகளால் வந்தது. அவள் அலுவலகம் கிளம்பும் நேரம் பார்த்துக் கண்ணைக் கட்டிக்கொண்டு எதிரே வந்து நின்று தொலைகின்றன. இதுகளை எல்லாம் மிஷின் கன்னால் கட்டுக் கொல்ல வேண்டும்... ஆனால் பூனையைக் கொன்றால் பாவமோ! அவள் மட்டும் பிரதம மந்திரியானால் 'இந்தியாவில் பூனை களே இருக்கக் கூடாது' என்று சட்டம் போட்டுவிடுவாள்.

அந்தப் பஸ் 'பிரேக் டவுன்' ஆகி இன்னொன்றில் தொற்றிக் கொண்டு வந்து ஸ்டாப்பில் இறங்கி ஓட்டமும் நடையுமாக அவள் அலுவலகம் வந்து சேர்ந்தபோது மணி பதினொன்று.

ஆனால் ஓர் ஐந்து நிமிடம் பிந்தினதால்கூட வள் ளென்று விழும் தலைமைக் குமாஸ்தா சதாசிவம் அன்று அவளது தாமதத்தைக் கண்டுகொண்டதாகவே தெரிய வில்லை. "வாம்மா வித்யா" என்றார் சோகமாக. "விஷயம் தெரியுமா உனக்கு! நம் எம்.டி.யின் ஸ்டெனோ கிராஞ்சலி அவள் புருஷனோடு ஸ்கூட்டரில் வரும்போது ஆக்ஸிடென்ட் ஆகிவிட்டதாம். கையை எளன்றியதில் மூன்று இடங்களில் எலும்பு முறிவாம். இரண்டு பேரும் பிழைத்தது மறு பிழைப்பு என்கிறார்கள்" என்று விவரம் தெரிவித்தார்.

"எனக்கு அப்பவே தெரியும்" என்றாள் வித்யா பலீரென்ற குரலில்.

சற்றுத் திகைத்த முகங்கள் அவளை நோக்கித் திரும்ப வும், "நிஜம் சார். ஒரு தடவை இல்லை. இரண்டு தடவை ஆபீசுக்கு கிளம்பினால் எதிரே பூனைதான். அப்போதே எனக்குப் பயம்தான். பூனை வளர்கின்ற

வீட்டுக்கு எதிர்வீட்டில் இருந்துகொண்டு சருனம் பார்க்க லாமா என்று நித்திகடக் கேட்டார்கள். பாருங்கள் என்ன ஆயிற்று என்று நான் நினைத்தது சரியாகப் போயிற்று'' என்று வினக்கமும் தந்துவிட்டு தன் மேசையில் டிபன் பாத்திரம், கைப்பை எல்லாம் உரிய இடத்தில் வைத்தவள், திடுமென அங்கே சத்தமின்றிப் போகவும் யோசனை யோடு திரும்பிப் பார்த்தான்.

எல்லோரையும் போலவே அவளது பார்வையும் வாசித்புறம் சென்றது.

அங்கே, இடிப்பைச் சுற்றி ஓடிய கறுப்பு பெல்ட் தவிர முழு வெள்ளையில் ஆறடி உயரத்தில் நெடு நெடுவென்ற நின்று கொண்டு இருந்தவன் — அந்த மூன்று மாடிக் கட்டி டத்தின், அங்கே நடந்த தொழிலின் எதிர்கால உரிமை யாளன் அப்போதைய ஆக்டிங் எம்.டி. ஆனந்தன்.

அவன் பார்வை அவள் மேல் பதிந்திருந்தது.

ஏன்?

ஏதேனும் தப்புத் தவறாய் உளறினோனா?

மிடறு விழுங்கியபடி அவசரமாய் யோசித்தாள் வித்யா.

அவள் யோசித்து முடியும்வரை காத்திராமல் மறு வினாடியே சதாசிவத்திடம் திரும்பிவிட்டான் ஆனந்தன்.

''என்னோடு வாருங்கள்'' எனச் சுருக்கமாக மொழிந்து விட்டு வெளியேறினான்.

பின்னோடு சதாசிவமும் விழுந்தடித்துக் கொண்டு ஓட லிஃப்ட் நிறந்து மூடும் ஓசை கேட்டது.

ஆனந்தனின் ஆபீஸ் மூன்றாம் மாடியில்.

சற்றுப் பொறுத்துத்தான் பேச்சு எழும்பியது.

''Congratulations மேடத்தை ஆல்பத்திரியில் சேர்க்க எம்.டி. தான் ஏற்பாடு செய்தாராம். சதாசிவம் சார் சொன்னார்'' என்றான் லீலா அப்போதும் தணிந்த குரலிலேயே.

வித்யாவுக்கு ஏனோ எரிச்சல் வந்தது. 'சத்தமாய்ப் பேசினால் தலையைச் சீவிவிடுவாரா? நாங்கள் எல்லோரும் படியேறி மாடிக்கு வரவில்லை? இவருக்கு ஒரு மாடி ஏறினால் கால் உடைந்து விடுமா?' என்றெல்லாம் ஏதேதோ எண்ணமிட்டபடி டைப்ரைட்டரைத் திறந்து தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

ஆனால் விரைவிலேயே அதை மூடி வைத்துவிட்டு அவளும் மூன்றாம் மாடிக்குச் செல்ல வேண்டியிருந்தது.

அங்கே பெரிய ஹாலையைச் சுற்றிலும் பெரிய பெரிய வீடுகளும், பலமாடி கட்டிடங்களும், நிலேட்டர்களும், பாலங்களும் பொருத்தமான வண்ண அமைப்புகளில் கண்ணைப்பறித்தன.

நடுவே இடந்த சோபாக்களைப் பார்க்கையில் இந்த மனிதர் உட்காருவாரா என்று தோன்றியது.

அழகான ஷோ-கேஸ்களோடு வினக்குகள்!

கட்டிடத் தொழில் செய்யும் அந்த நிறுவனத்தில் வாடிக்கையாளர்களோடு எம்.டி. உரையாடும் இடத்தில் அழகு பற்றி ஒரிருவர் சொல்லிக் கொண்டிருந்த போது வித்யா முதல் தடவையாகப் பார்க்கவும் பிரமித்தாள்.

இதுவே இப்படி என்றால் இந்த எம். டி. யின் வீடு எப்படி இருக்கும்!

பிரமிப்புடனேயே சதாசிவத்தைத் தொடர்ந்தாள்.

உள்ளே அவன் ஆனந்தன் நிமிர்ந்தும் பாராமல் ஏதோ ஃபைலில் ஆழ்ந்திருந்தது அவளுக்குச் சற்று ஏமாற்றமாய் இருந்தது.

ஆனால் அது அவளது பர்சனல் ஃபைல் என்பதை ஒரு நிமிஷத்தில் அவள் கண்ட சமயம் சதாசிவம் பேசத் தொடங்கியிருந்தார்.

"நீ கம்பெனி செகரட்டரி கோர்ஸ் பாஸ் செய்திருக்காயில்லே?" என்று விசாரித்தார்.

அவ்வப்போது அவரது பேச்சில் தலைகாட்டும் பாலக்காட்டு வாடை வினைத்த நெறு சிரிப்பை அடக்கி, "ஆமாம் சார்" என்றாள் பணிவாக.

உடனே மனம் படபடத்தது.

இதை ஏன் கேட்கிறார்?

அவளது பர்சனல் ஃபைல் இங்கே ஏன் வந்தது?

விரைவிலேயே விஸ்தாரமாய் விளக்கினார் சதாசிவம்.

தோஞ்சவிக்குக் குணமாக நெடுநாள் பிடிக்கும். உடைந்த எலும்புகள் சேர்ந்தால்கூட 'டைப்' போன்ற வேலைகளை இனி செய்ய முடியாது. வித்யா செகரட்டரி கோர்ஸ் செய்திருப்பதால் அவளுக்கு அந்த இடத்திற்கு பதவி உயர்வு தரப்படுகிறது. இந்த உயர்வின் பலன் மாதம் இருநூற்று ஐம்பது ரூபாய்.

வா... வ்!

வித்யாவின் விழிகள் வட்டமாய் விரிந்தன.

ஆச்சர்யமாய் மேசையின் மறுபுறம் அமர்ந்திருந்த வனைப் பார்த்தாள்.

மேசை மேல் கிடந்த பேப்பர் வெயிட்டை ஏதோ யோசனையாக உருட்டிக் கொண்டு இருந்தான் அவன்.

தன்னிச்சையாய்த் தலை சற்றே நெளிப்பிக் கொள்ள நிமிர்ந்து அமர்ந்தாள் அவள்.

"இன்றே வேலையைத் தொடங்கிவிடு. நான் வருகிறேன்" என்று சென்றார் சதாசிவம்.

ஒரு நிமிடம் அமைதி கழிந்தது.

பிறகு, "நீ நன்றியறிதலைக் காட்டும் விதத்தில் நான் அப்படியே மெய்மறந்து போனேன்" என்றான் ஆனந்தன்.

குப்பென்று சிவந்து முகம் வியர்த்தான் வித்யா. "ஒ... சா... சாரி... சார்... ந... நன்றி..." என்று திக்குமுக்காடிப் போனான்.

ஆனந்தனின் ஒற்றைப்புருவம் சற்றே ஏறி இறங்கியது. கண்களின் கொஞ்சம் கேலி... கேலி போல் இருந்ததோ!

அவள் மேலே யோசிக்க அவகாசமின்றி அவன் வேலையைத் தொடங்கி விட்டான்.

ஆனால் அவள் உள்ளூர அஞ்சியது போல அவனிடம் வேலை செய்வது கடினமாக இருக்கவில்லை.

பழக்கமின்மை காரணமாக அவன் தடுமாறக் கூடிய விஷயங்களை அவனாகவே விளக்கிச் செய்ய வைத்தான்.

கஷ்டமாக இருக்கிறதா என்று விசாரிப்பது வேறு.

மற்ற பெண்களோடு பகல் உணவு கொள்கையில் உள்ளூரப் பெருமையில் ராணி போல உணர்ந்தாள் வித்யா.

மாலையில் வேலை முடிந்து எழுகையில் ஆனந்தன் கேட்டான். "என்னவோ பூனையைப் பார்த்தால் கஷ்டம் நஷ்டம் என்று அனந்தாயே; உண்மையாக உனக்குக் கஷ்டம்தானா?"

"அது..." என்று சற்று நேரம் குழப்பிப் போனவளுக்குச் சட்டென நினைவு வந்து முகம் தெளிந்தது. "அது வெள்ளைப் பூனைதான் சார். கறுப்புதான் ரொம்பவும் கெட்ட சகுனம். அத்தோடு காலையில் பல் விளக்கும் போது இரண்டு அண்டங்காக்கை பார்த்தேன் சார். அது 'டூப்பார் ஜாய்' ஆயிற்றே. அத்தோடு கெட்ட சகுனம் பார்க்காமல் நான் திரும்பிப் போய் தண்ணீர்கூடக் குடித்து விட்டேன். அதனால் எனக்கு நல்லதுதான் சார் நடக்கும்' என்றாள் சர்வ நிச்சயமாய்.

"பாருங்கள், சார். நான்கூட பூனையும் காக்கையும் எப்படி ஒத்துப்போகும் என்று யோசித்துக் கொண்டே

வந்தேன். இப்போதுதான் புரிகிறது. எப்படி எல்லாம் சரியாக நடக்கிறது பார்த்தீர்களா, சார்?'' என்று வியப்பு வேறு.

''அதைவிட நரி முகத்தில் விழித்தால் ரொம்பவும் நல்ல சகுனமாம். ஒரு நரியை உன் கட்டிலோடு கட்டி வைத்துக் கொள்வதுதானே, தினமும் காலையிலேயே நல்ல சகுனம்...'' என்றவன் அவள் கன்னங்கள் பளிச்சிடவும், ''ராத்திரியோடு உன் மூக்கையும் காதையும் அறுத்து கபளீகரம் செய்யாமல் இருந்தால்...'' என்று அவளை அதிரடித்து விட்டு எழுந்தான்.

''நீ விளம்பியதும் ராமன் பூட்டிக் கொள்வான். ஒரு விஷயம் கவனத்தில் வை. எனக்கு எல்லாமே நேரம் தவறாமல் நடக்கவேண்டும். எலி வந்தது, பூனை வந்தது என்று லேட்டாக வந்தாயானால் இந்த வேலைக்கு ஆள் தேவை என்று விளம்பரம் போட வேண்டியிருக்கும், நினைவு இருக்கட்டும்'' என்று அழுத்தமான குரலில் மொழிந்துவிட்டு வெளியேறினான்.

அவனது நேரான முதுகைப் பார்க்கையில் நிச்சயம் செய்வான் என்றே வித்யாவுக்குத் தோன்றியது.

நல்ல வேளையாக சித்தப்பா வீட்டில் சமையலுக்கு ஆள் இருந்தது.

அந்த அம்மாளிடம் சற்று கைச்சியம் பண்ணி மதிய உணவுக்கும் வெகு காலையிலேயே தயாரிக்கச் செய்து எடுத்துக் கொண்டு, ஒன்பதரை ஆபீசுக்கு ஏழரைக்கே கிளம்பத் தொடங்கி விட்டாள் வித்யா

சிறிய தாயார் இதிலெல்லாம் தலையிடுவது இல்லை. சரகுவதியைப் பொறுத்தவரையில் பெற்றோரை இழந்த பெண் என்று வித்யாவிடம் இரக்கம்தான். ஆனால் அளவுக்கு உட்பட்ட இரக்கம்

இரு, சாப்பிடு, தூங்கு, போ, அல்லவாவுதான். அதற்கு மேல் தனக்குத் தொல்லை இருக்கலாகாது என்று முதலிலேயே புரிய வைத்து விட்டாள்.

சித்தப்பாவும் அப்படித்தான்; ஏன் அந்த வீட்டில் எல்லோரும் அப்படித்தான்.

யாரும் அவளை அவமதித்தார்கள் என்று இராது.

ஆனால் புவனா, திலீப், சுரேஷ் போல சலுகை கொண்டாடவோ, சண்டை போடவோ இவளால் முடியாது.

அவளது சம்பளப் பணத்தை உன் செலவுக்காகக் கொடு என்று யாரும் கேட்க மாட்டார்கள்; ஆனால் அவளுக்கு வேண்டியதை அவள்தான் வாங்கிக் கொள்ள வேண்டும்.

திருமணம் அது இது என்று வரும் காலத்தின் செலவுக்கு அவள் பெயரில் ஒரளவு பணம் இருந்தது. அதனால் அவளை அங்கே யாரும் சுமையாகக் கருத வில்லையோ!

ஒரோர் சமயம்—புவனா தாய்மடியில் தலை வைத்துச் சலுகை கொண்டாடும்போது வித்யாவுக்கும் இரக்கம் வருவதுண்டு.

ஆனால் அவளது நாலாம் வயதில் ஒரு விபத்தில் மறைந்த பெற்றோரை என்ன முயன்றும் அவளால் நினைவுக்குக் கொணர முடிந்ததே இல்லை.

பதினைந்து ஆண்டுகளாக வளர்த்த தாய்வழிப் பாட்டி பிரியமாய்த்தான் இருந்தார், என்றாலும் இரண்டு தலைமுறை வித்தியாசமும் வயதின் தள்ளாமையின் காரணமாய் எவரும் ஒரேயடியாய் உருகி வழிந்தது இல்லை.

இப்போது ஓர் ஆண்டு காலமாய் பாட்டி இறந்தபின் விருந்து சித்தப்பா வீட்டு வாசம்.

எதுவுமே, இது தன் வீடு, தன் இடம் என்ற நிச்சயத்தையோ பாதுகாப்பையோ தராதது அவளைப் பாதிக்காமல் இல்லை. சின்ன விஷயங்களில் கூட, ஆனால்

துடிப்பான பெண் என்பதால் தன் இழப்புகளை எண்ணி ஒய்ந்து போகாமல் உற்சாகமாகவே இருந்தாள்.

புதிய வேலையும் அவளுக்குப் பிடித்துப் போயிற்று. அன்றே 'டைப்பிங் பிரிவில்' நாலோடு ஐந்தாக இட்ட வேலையை இளிப்பின்னை போலச் சொன் பிசகாமல் அடித்துக் கொடுத்தவளுக்கு இன்னொரு மூனைவேலை கவராயெமாய் இருந்தது.

மண்ணுக்கு மண், மாடிக்கு மாடி கட்டுமானத்தால் என்னென்ன வித்தியாசம் என்பனவற்றையெல்லாம் ஆர்வத்தோடு பயின்றவள். சாதாரண வேலைகளுக்குத் தானாகவே 'கொட்டேஷன்' அனுப்பும் அளவுக்குத் தேர்ந்தாள்.

அவளிடம் 'சபாஷ்' கூட வாங்கினான்.

அவன் மெச்சிய நாள் முழுவதும் வானவில்லில் மிதந்து ரோஜாப் பூவில் நடந்து பன்னீரில் குளித்தாள்.

அவ்வப்போது அவளிடம் வாங்கிக் கட்டிக் கொள்வதும் உண்டு.

ஒருதான் அவளிடம் ஒரே பூரிப்பு.

சற்றுநேரம் யோசனையோடு பார்த்திருந்து விட்டு, ''என்ன எல்லாம் ஒரே இன்பமயம்?'' என்று விசாரித்தான் ஆனந்தன்.

''இன்றைக்கு நான் வருகின்ற வழியில் ஒரு கழுதை 'கான் கான்' என்று கத்திற்று சார்'' என்றாள் அவள் விழி மலர.

''அவ்வளவுதானா நான் என்னவோ ஏதோ என்று எண்ணி விட்டேன். ஆமாம், கழுதை கான் கான் என்று கத்தாமல் 'லொன் லொன்' என்றா குறைக்கும்?'' என்றான் அவன் எரிச்சலோடு. ''ஆனால் அதற்கும் உங்கள் சந்தோஷத்துக்கும் என்ன சம்பந்தமோ?''

அவனது அறிவாமைக்கு இரங்கியவளாக, ''கழுதை கத்தினால் நல்ல சகுனம் சார்'' என்று விளக்கினாள் அவள்.

''கழுதை கத்தினால் அதற்கு வலி என்று அர்த்தம். ஒரு கழுதை வாங்கி வாயிலில் கட்டி வைத்து அவ்வப் போது நாலு அடி கொடு. நல்ல சகுனம் கேட்டுக் கொண்டே இருக்கும்'' என்றான் அவன் இளக்காரமாய்.

இன்னொரு நாள் அவனது நண்பன் வீட்டில் ஒரு துக்கம், வருவதற்கு லேட் ஆகும் என்று சென்றான்.

அவன் வந்ததுமே விசாரித்தாள். ''நேற்று இரவு அவர்கள் வீட்டில் நாய் வளை விட்டிருக்குமே, யாராவது கேட்டார்களாமா?'' சற்று நேரம் அவன் பேச்சிழந்து போனான். பிறகு, ''நினைத்தேன் காக்காய், பூனை கதை எல்லாம் வந்தாயிற்றே இன்னமும் நாயைக் காணோம் என்று யோசித்தேன்'' என்றான் எளமையாய்.

''நிஜம், சார். என் அம்மா அப்பா ஆக்சிடெண்ட் ஆன முந்தின நாள் அப்படித்தான் நாய் வளையிட்டதாம். மூன்று தடவை பாட்டியே கேட்டார்களாம்'' என்றாள் அவள் ரோஷத்துடன்.

''வளையைக் கேட்ட அவர்கள் கல்லுக்குண்டாய் உட்கார்ந்து கொண்டார்களாக்கும்.''

''அதில்லை...'' என்று தொடங்கியவளை இடை மறித்துச் சிறினான்.

' இன்னொரு தடவை நாய் நரி என்று ஏதாவது சொல்வதென்றால் இந்தத் தளத்துக்குள்ளே நுழையாதே'' என்று.

அவள் வாயை மூடிக் கொண்டாள்.

அன்று வரும்போதே ஆனந்தன் உற்சாகமாக இருந்தான்.

''ஒரு புது 'வெஞ்சர்' வித்யா கொடைக்கானலில் ஒரு பெரிய பங்களா, நீச்சல் குளம், டென்னிஸ் கோர்ட்,

வேலைக்காரர், குலார்ட்டஸ் என்று சகலத்தோடு அது முடிந்ததும் பக்கத்திலேயே அவருடைய நான்கு பிள்ளைகளுக்கு அதே போல் வீடுகள். முதல் பங்களாவுக்கு மதிப்பீடு என்ன தெரியுமா? நம் கணக்குப்படி ஐம்பத்தைந்து லட்சம்? பத்து சதம் கணக்கிட்டாலும் நமக்கு ஐந்தரை லட்சம் உடனேயே அதே போல நாலு வாவாவா கொட்டேஷன் கொடுக்க வேண்டும், ஜே.பி. விடமும் கேட்டிருக்கிறார்களாம். ஆனால் பெரியவருக்கு நம்மிடம்தான் பிரியம் வா, முதலில்... என்ன வித்யா என்ன தயக்கம்?"

அவள் தன் குறுக்கெழுத்து நோட்டையும் பென்சிலையும் இன்னமும் தொடாமல் நிற்கவும் அவன் விளக்கம் கேட்டான்.

"சார்... இன்றைக்கு அஷ்டமி சார். அஷ்டமி நவமியில் எதையும் தொடங்குவது அவ்வளவு நல்லது இல்லை. அதனால் நாளன்று அந்த வேலையை ஆரம்பிக்கலாம் சார்," என்று அவள் பதிலிறுக்கவும் ஆத்திரமாக முறைத்தான்.

"அடுத்த நிமிடம் முடியுமுன் நீ வேலையைத் தொடங்கவில்லையானால் அதன் பிறகு இந்தக் கட்டிடத்திற்குள் நீ காலடி எடுத்து வைக்கவே தேவையிராது. சம்பள பாக்கியை வாங்கிக் கொண்டு போவது தவிர. எப்படி உத்தேசம்?" என்று அவளை மட்டம் தட்டி ஏளனமாய் வினவினான் அவன்.

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

"சாமி காப்பாற்று முருகா காப்பாற்று," என்று மனதுக்குள் வேண்டிக்கொண்டபடி வேலையைத் தொடங்கினாள் வித்யா, ஆனால் இரண்டே தினங்களில் அந்தக் கொட்டேஷன் காபியை எடுத்து வரச் சொல்லிக் கலையுடன் ஆராய்ந்தான்.

"என்ன சார்?" என்றாள் அவளும் கலையுடன்.

"ஜே.பி. பில்டர்ஸ் இதற்கு ஐம்பது லட்சத்துக்குக் கொட்டேஷன் கொடுத்திருக்கிறார்களாம். பெரியவர் நேற்று இளப்பில் என்னிடம் தனியே சொன்னார். என்னிடம் அவருக்குப் பிரியம் என்பதால் கொட்டேஷனை திருத்தி அனுப்பச் சொன்னார். ஆனால், எப்படித் திருத்துவது? நம் லாபமே ஐந்தரை லட்சம்தான். ஐம்பதாயிரத்துக்காக இந்த வேலை எடுப்பார்களா? போக வரச் செலவிலேயே அடிபட்டுப் போகுமே..."

"ஜே.பி.காரர்கள் நிமிண்டில் கலப்படம் செய்வார்கள் என்று நினைக்கிறேன், சார்" என்றாள் வித்யா.

"சேச்சே அவர்களும் நம்மைப் போல ஒழுங்கான வேலை செய்கிறவர்கள்தான்...பின்னே எப்படி...?" என்று குழம்பினான் ஆனந்தன்.

சட்டென அவள் விழிகள் பளிச்சிட்டன. "சார், எனக்குப் புரிந்து விட்டது. நாம் அன்றைக்கு அஷ்டமியில் வேலை தொடங்கினோம் இல்லையா? அதனால்தான் இத்தத் தொல்லையெல்லாம். அதை அப்படியே தூரப் போட்டுவிட்டு, இன்று நவமி நல்ல நாள். இன்று புதிதாய் ஒன்று...டைப் செய்...து அ...னுப்பி...னால்..." லேசமாகத் தொடங்கியவள் அவனது முகம் மாறிய விதம் கண்டு வாக்கியத்தை முடிக்காமல் இருந்தாள்.

"அனுப்பினால் ஜே.பி.யில் ஐம்பது லட்சம் என்று 'கோட்' பண்ணியது தானாக அறுபது என்று மாறிவிடுமாக்கும்? எனக்கு வருகிற கோபத்துக்கு..." முயற்சி செய்து தன்னைச் சுதாரித்தவன், "...தோ பார் வித்யா. அட்டமி நவமி எல்லாம் சந்திரனுடைய கலைகளுக்காக வைத்த பெயர்கள்—வெறும் பெயர்கள். இதை வைத்து வேலை செய்வதானால் மாதத்தில் நாலு நாள் வெறும் நாளாகிப் போகும். அதனால் இந்த மாதிரி உளறுவதை நிறுத்து" என்று கண்டிப்பான குரலில் கூறி முடித்தான்.

அதற்கு மேல் பேச அவளுக்குத் தைரியம் இல்லை.

சற்று நேரம் அந்தக் கணக்குகளை ஆராய்ந்தவன் முகம் தெளிவாகவே இல்லை. ''ஓர் இரண்டு லட்சம் நம் லாபத்தில் குறைக்கலாம். அதுவும் வேண்டியவர் என்ப தால்தான். ஆனால் விலை உயர்வு, மழையினால் பாதிப்பு அது இது என்று நமக்கு வருமே! பத்து சதம் கூட இல்லா மல் எப்படி லேலை செய்வது?'' என்று மேசை மேல் தாளம் போட்டபடி உரக்க யோசித்தவன் சட்டென நிமிர்ந்தான். ''இந்த ஜே.பி. மதுரைக்காரர் வித்யா. நம்மைவிட அந்த இடம் பற்றி அறிந்தவர். நாமும் லோகேஷனை நேரில் பார்த்து விட்டு மேற்கொண்டு கொட்டேஷனைப் பார்க்கலாம் நாளைக் காலை ஃப்ளைட்டுக்கு இரண்டு டிக்கட் ஏற்பாடு செய்.''

''இரண்டு? யாருக்கெல்லாம் சார்? ஒன்று நீங்கள்...''

''அடுத்தது நீ... ஏன் உன் வீட்டில் விட மாட்டார் களா?''

வீட்டில் அவளைப் பற்றிக் கவலைப்பட யார் இருக் கிறார்கள்? அன்னையா, தந்தையா? அக்கறை காட்ட யாரு மற்ற அனாதையாயிற்றே... ஒருகணம் சோர்ந்த போதும் உடனேயே அந்த நினைவை ஒதுக்கி யோசித்தாள். 'இவனோடு தனியாகப் போவது சரியாகுமா?'

''அங்கே... அங்கே தங்க வேண்டியிருக்குமா?''

கணக்கைப் புரட்டிக் கொண்டிருந்த அவன் சட்டென நிமிர்ந்தான்; அவளைக் கூர்ந்தான். ''ம்ம்... குறைந்தது இரண்டு நாளேனும் வேண்டாமா, அங்கே உன்னை நான் மயக்கி கைவசப்படுத்துவதற்கு?'' என்றான் கேலியாக.

குப்பென முகம் சிவந்தது அவளுக்கு. சமாளித்துக் கொண்டு, ''வீட்டில் எத்தனை நாள் என்று சொல்ல வேண்டும். அதற்காகத்தான் கேட்டேன்'' என்றாள் தரையைப் பார்த்தபடி.

அவன் நம்பினானோ இல்லையோ, ''நாளன்று பாண்டியனில் திரும்பி வர டிக்கட்டுக்கும் ஏற்பாடு செய்து

விடு. ஏதாவது டிராவல் ஏஜன்சியில் சொல்லி போதும். உன் வீட்டில் யாராவது முணுமுணுத்தால் இரண்டுபேரும் வெவ்வேறு ஒட்டலில் தங்கப் போகிறோம் என்று சொல்லி விடு'' என்றான் அவன் வேலையிலேயே கவனமாக.

அவனை நம்பாததாய் எண்ணி அவன் கோபம் கொண்டு விட்டது அவளுக்குப் புரிந்தது.

ஆனால் அவளுக்குத் தன்னிடம்தான் பயம் என்று எப்படி அவனிடம் சொல்லுவது?

முதல் தடவையாக விமானத்தில் பறந்ததைக் காட்டி லும் ஆனந்தனின் அருகமர்ந்து சென்றபோது தனக்குப் பெரும் கிளர்ச்சியூட்டுவதை வித்யா ஒரு பயத்துடன் உணர்ந்தாள்.

அவனுக்குத் திருமணம் ஆகியிருக்கலாம், அல்லது திருமணம் நிச்சயமேனும் நடந்திருக்கலாம்.

அவனைப் போலன்றி பெரிய பணக்காரர்களான அவனுடைய பெற்றோர் தம்மைப் போலத் தனம் மிக்க குடும்பத்தில் மகனுக்குப் பெண் தேடி வைத்திருக்கலாம்.

இதெல்லாம் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?

இலை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் அவர் களிடையே உள்ள அந்தஸ்து வேற்றுமை?

இதெல்லாம் ஒன்றும் இல்லை என்றாலும் கூட அவன் மனதிலும் இந்த அன்பின் எதிரொலி இருக்க வேண்டுமே. இவள் பாட்டில் இறுக்குத்தனமாக ஏதேதோ நினைத்துக் காற்றில் கட்டிடம் எழுப்புவது எல்லாவு பிசகு!

ஒன்றையும் யோசியாது தன் முட்டாள் மனம் செல்லும் திசை கண்டு பயந்து போனாள் வித்யா.

கட்டுப்பாட்டுக்குள் இரு மனமே என்று பலமுறை தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

அவளைப் படித்தவன் போல, ''பயமாய் இருக்கிறதா வித்யா?'' என்று ஆனந்தன் கேட்கவும் அரண்டு போனாள் அவள்.

அவனுக்கு எப்படித் தெரிந்தது!

ஆனால், "முதல் தடவை விமானப் பயணம் செய்யும் போது குறைந்தது தொண்ணூறு சதவீதம் பேருக்காவது பயம் வராமல் இருந்ததில்லை. இரண்டு தடவை போய் வந்தால் காலில் போகிற மாதிரியே ஆகிவிடும். தைரியமாக இரு" என்று அவன் கூறவும் அப்பாடி என்ற ஆசுவாசப் பெருமூச்சுடன் நிம்மதியும் வந்தது.

உடனேயே தரையிலிருந்து இப்போது எத்தனை அடி உயரத்தில் இருக்கிறோம். விமானம் பழுதுபட்டு விழுந்தால் என்ன ஆகும் என்று எண்ணி அந்த பயம் கொள்ளவும் தொடங்கினான் — தொண்ணூறு சதவிகிதத்தில் ஒருத்தியாக.

மதுரையில் விமான நிலையத்தில் இறங்கி, தேவையான உபகரணங்களைச் சேகரித்து, வேண்டிய ஆட்களோடு இளம்பி கொடைக்கானல் பகுதியில் கட்டிடங்களுக்கான 'சைட்'டை அடைவதற்குள் சற்று தாமதம் ஆகிவிட்டது.

ஆயினும் விடாமல் தனக்கு வேண்டிய 'டெஸ்ட்'களை யெல்லாம் எடுத்து முடித்துவிட்டே ஆட்களை அனுப்பி வைத்தான்.

செக்கச் சிவப்பாய் மறைந்து கொண்டிருந்த சூரியனை ரசித்துக் கொண்டிருந்த வித்யாவை அழைத்தபடி பாறைகளில் தாவி ஓடிவந்த ஆனந்தனின் முகத்தில் உற்சாகம் நிறைந்திருந்தது.

காரணம் புரிந்ததால் அவன் முகமும் மலர்ந்தே இருந்தது.

"எல்லாம் பாறை" என்று முறுவல் செய்தாள்.

"யா நல்ல வேளையாக நேரில் வந்தோம். மண், மணல் என்று அற்பிலாரத்துக்காகச் செலவே செய்ய வேண்டியது இல்லை. அங்கங்கே பில்லர் வளர்த்து—பில்லர் தான் எப்படியும் வளர்க்கப் போகிறோமே அதன் மேல் இலகு வாய்க் கட்டிவிடலாம். செலவு குறைவு, வேலை நாட்கள்

மிச்சம். இந்தக் கற்களும் பயன்படும். தோராயமாகக் கணக்குப் போட்டால்கூட பழைய தொகையில் இருந்து ஆறுலட்சம் குறைகிறது. நம் பத்து சதம் அப்படியே நிற்கும். இலி இந்த 'புராஜக்ட்' நம்முடையதேதான்" என்று உற்சாகமாய் இயம்பியவன் சற்று நிறுத்தி, "உன் அஷ்டமியை நான் ஜெயித்துவிட்டேன் போலத் தெரிகிறதே உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று அவளை வம்புக்கு இழுத்தான்.

சற்று நிதைத்தாலும் விடாமல், "அது... நான் கடவுளை வேண்டிக் கொண்டே இருந்தேனே சார்" என்றாள் வித்யா.

அவனும் விடுவதாக இல்லை. "ஆக நான் மூளையைக் கசக்கி அங்கிருந்து இங்கே அலைந்து வேலை செய்ததெல்லாம் — என்னுடைய மூளை வேலை, உடம்பு உழைப்பு எல்லாம் ஒன்றும் இல்லை என்கிறாய் சரி போகட்டும். உன் வழியிலேயே போவோம், என்ன தடை என்றாலும், அதாவது கெட்ட சகுனம், கெட்ட நான் என்று ஏதாக இருந்தாலும் நீ சொல்லுகிற மாதிரிக் கடவுளை வேண்டிக் கொண்டு மேலே போக வேண்டியதுதானே? எதற்காக செய்கிற வேலையை நிறுத்த வேண்டும்?" என்று கேட்டான்.

இதற்கு என்ன பதில் சொல்வது?

உண்மையில் இதில் அவளுக்கே குழப்பம்தான்.

இதே கேள்வியை அவளுடைய பாட்டியாரிடம் ஒரு தரம் அவளே கேட்டிருக்கிறாள்.

"இதெல்லாம் கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்கிற மாதிரி விஷயம். பெரிய ஞானிகளுக்கே தெரியாதது. வழிவழியாய் நமக்குக் கெடுதலைச் சொல்லியிருக்க மாட்டார்கள். அதனால் தொணதொணக்காமல் சொன்னபடி செய்" என்று ஒரு கட்டளைதான் பதிலாய்க் கிடைத்தது.

அதையே அவனிடம் திருப்பிப் படிக்க முடியுமோ?

"அதெல்லாம் பெரிய விஷயம் சார் நமக்குப்புரியாது" என்று சமாளிக்குமுன் தலைக்கு மேல் இருந்த மரக்கிளையில் இருந்து எதுவோ தொப்பெனத் தலையில் விழத் துள்ளி குதித்தாள்.

தலையில் விழுந்து அதிலேயே மிரண்டு தப்பினோம் பிழைத்தோம் என்று இறங்கி ஓடியது ஒரு பல்லி என்று கண்டதும் அப்படியே நடுங்கிப் போனான் வித்யா.

"பல்லி சார்... பல்லி சார், அய்யோ உச்சந்தலையில் பல்லி விழுந்தால் மரணமாயிற்றே. நான் சாகப்போகிறேனே சார்" என்று பதறிக் கதறிவிட்டாள்.

"உன் தலையில் விழுந்தால் பல்லிதான் சாகும்" என்று வேடிக்கை பேசியவன் அவள் தவிப்பைக் கண்டதும் "ஷ்... வித்யா அது வெறும் பல்லி. பிடிப்பு லழுக்கி விழுந்திருக்கும். அதற்குப் போய் இப்படி அலட்டிக் கொள்வார்களா?" என்ற அவனது பேச்சை அவள் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

"எங்கள் அம்மா, அப்பா, பாட்டியோடு சீக்கிரமே போய்ச் சேரப் போகிறேன்..." என்று விசும்பினாள்

"ஏனோ அப்படி? கெட்ட சகுனத்துக்குத் திரும்பிப் போய்த் தண்ணீர் குடிப்பது. அஷ்டமிக்கு ஒரு சாமி சரணம் என்று ஒவ்வொன்றிற்கும் ஒரு டிமிக்கி வைத்துத் தானே இருக்கிறாய். இதற்கு மட்டும் ஒரு பரிகாரம் இல்லாமலா போயிற்று?" என்று அவன் கேட்டதும் விழுக்கென நிமிர்ந்தாள்.

"இருக்கிறது சார்" என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். "ஒரு நாழிகை நேரத்துக்குள் குளித்துவிட்டால் பல்லி விழுந்ததற்குப் பலனே இராது" என்றவள் உடனே சோர்ந்தாள்.

"ஆனால் இங்கே தண்ணீருக்கு எங்கே போவது சார். நாம் மதுரை சென்று குளிக்கு முன் ஒரு நாழிகை கடந்து விடும்" என்றாள் சோகமாக.

அவளையே பார்த்த ஆனந்தனின் முகத்தில் கடுமை பரவியது. உடம்பு இறுகியது

"இந்தப் பாறைத் தொடருக்கு அந்தப் பக்கம் ஒரு சின்ன ஓடை போகிறது. ஆனால் இப்போதே ஜோராகக் குளிரத்..." மேலே அவன் காற்றோடுதான் பேசிக் கொண்டு இருந்தான்.

லேசாக ஓடிச் சென்று, பனி உருளைபோலக் குளிர்ந்த அந்த நீரை இரு கைகளாலும் லேசுலேசாய் வாரி மொண்டு தலை உடம்பெங்கும் ஊற்றிக் கொண்டான்.

உடம்பு முழுமையும் நனைந்ததும் குளிர்ந்து விட்டாற் போல் உணர்ந்து நிம்மதியோடு திரும்பி ஒடி—ராச்சேலை ஒட்டித்தட்ட ஓடி வந்தாள்.

"சார், நான் குளித்து விட்டேன். பல்லி விழுந்த பலன் இனி ஒன்றுமில்லை." என்று குதூகலமாக மொழிந்தவளின் ஈர உடலில் மாலையில் தவழும் குளிர் தென்றல் லேச பேச்சு நின்று பற்கள் தந்தி அடிக்கத் தொடங்கின.

சற்று நேரம் பற்களை இறுகக் கடித்து நடுக்கத்தைச் சமாளிக்க முயன்று தோற்று, "சார்...குரு...ளிருகி...றது" என்று அவனிடம் முறையிட்டாள். என்னவோ அவன் குளிரை நிறுத்திவிடுவான் போல

அவ்வளவு நேரம் அவள் படும்பாட்டை வேடிக்கை பார்த்தவன் அவள் கையைப் பற்றி இழுத்துச் சென்று காரில் பின்புறம் ஏற்றினான்

அவன் அருகிலேயே தானும் ஏறி அமர்ந்து. "இந்தக் குளிரை போக்க எனக்கு வழி தெரியும்" என்று அவளைத் தன்புறம் திருப்பி இறுக அணைத்தான்.

சற்றும் எதிர்பாராத இந்த அணைப்பில் முதலில் வித்யா ஒரேயடியாகத் திகைத்துப் போனாள்.

அலனிடம் பர்சனல் ஸ்டெனோவாக அலள் பணி யாற்ற தொடங்கிய நாளிலிருந்து முறை பிசகி அலறிய அலன் பார்த்தது கூடக் கிடையாது.

ஏன் ஒரோர் சமயம் பார்க்கவே இல்லையே என்று அலள் ஏங்கியதும் கூட உண்டு.

இன்று திடுமென அணைக்கவும், ஒரு கணம் நிகைத்தலள் மறுகணமே நிமிறி விடுபட முயன்றாள்.

ஆனால் அலன் விடாமல், "ஷ், உன் குளிரைப் போக்கத்தான், வித்யா. குளித்து, பல்லி பலன் மரணத்தி லிருந்து தப்பித்துக் கொண்டாய். அதில் தப்பினவன் குளிரால் சாக வேண்டுமா? இக்கே என்னைத் தவிர வேறு ஹீட்டர் ஏது?" என்று கேட்டு இன்னமும் நன்றாக ஒட்டி அணைத்தான்.

"ஓ! அதுதானில்லையா, சார்" என்று அவளும் அலனிடம் ஒட்டினாள்.

அலனது உடம்புக் கதகதப்பில் தன் லெவெடப்பு மெல்ல மெல்ல மறைவதை உணர்ந்தாள்.

ஆனால் சற்று நேரம் சென்று அலனது நடுக்கம் நின்ற பிறகும் அலளை அலன் விடுவித்தானில்லை.

விடுவிப்பதை விடுத்து அலனது கரங்கள் அவளை வருடத் தொடங்கின.

சற்று எல்லை மீறிய வருடல்கள், அழுத்தங்கள். அன்றைய தினம் வரை அலள் அனுபவித்து அறியாதவை.

மிகவும் சகமாகவே இருந்தபோது ஏதோ தவறு என்று பெண்மையின் விழிப்புணர்வு எச்சரிக்க மெதுவாக விலக முயன்றாள்.

மீண்டும் அவன் அதை அனுமதியாமல் இன்னமும் வாகாக அணைத்து, "சரத்தனியில் நீ எல்வளவு

அழகாய்த் தெரிகிறாய், வித்யா! பல்லி விழுந்த பலனி லிருந்து தப்பிக்கத்தான் நீ குளித்தாய் ஆனால் என் பார்லையிலும் குளித்து விட்டாயே, உன்னை விட்டு விலக என்னால் முடியவில்லை...!"

"பார்... பல்லி விழுந்த பயநடுக்கம் போக நீரில் குளித்து குளிர் நடுக்கத்தை ஏற்றாய்."

"குளிர் நடுக்கம் மாற என் அணைப்பை ஏற்றாய்."

"அப்போது உனக்கு மட்டும்தானா சூடு ஏறும்?"

"ஓர் அழகான பெண்ணை அணைக்கும் போது பிழலனுக்குக்கூடச் சூடு ஏறுமே. நான மட்டும் உணர்ச்சி வசப்படாமல் இருக்க முடியுமா?"

"எல்லாம் உன் பல்லி பயத்தால் வந்தது. பொறுத்துக் கொள்" என்று அணைப்பை மேலும் இறுக்கினான்.

அலன் எதையோ அறிலுறுத்துவது போல் ஓர் எண் ணம் கணத்தில் தோன்றி மறைந்தது.

அதைவிட, உணர்ச்சிவசப்பட்டு அலன் தப்பு செய்து விடாமல் தடுப்பது முக்கியமாகத் தோன்ற, "இல்லை, சார், இது...தப்...பு" என்று அலனது தோளில் கை பதித்து அலனைத் தள்ள எண்ணி அவள் வைத்த கரங்கள் அங்கேயே ஒட்டிக் கொண்டன.

அப்புறம்...

அப்புறம் அவனைத் தவிர உலகில் ஒன்றுமே இல்லாததுபோல அவளது மனமும் உடலும் நெகிழ்ந்து போயின.

சற்றுப் பொறுத்து— கலந்து பரவிய முக்கால் இருளில் எதற்கோ பயந்து கிறீச்சிட்ட ஒரு காட்டுக் குருவியின் குரல் வெகு அருகிலே ஒலித்த போதும் தொலை தூரம் போல மெல்லத்தான் கேட்டது அவளுக்கு.

ஆனால் அவனுக்கு அப்படி இல்லை போலும்.

கய உணர்வு திரும்பியவன் போல் அவளைச் சுற்றிப் படர்ந்திருந்த தன் கரங்களை அவசரமாக விலக்கினான்.

அப்போதும் அவன் கழுத்தில் மாலையாகக் கோர்த்திருந்த அவனது கைகளை முரட்டுத்தனமாகப் பிரித்து எறிந்தாள்.

நீயைத் தொட்டவன் போல அவசரமாக விலகியவன் அதே வேகத்தில் காரை விட்டு இறங்கி முன்புறத்தில் ஏறி ஒட்டத் தொடங்கினான்.

கார் சீறிப் பாய்ந்தது.

அவளுக்கு இன்னமும் போதை தெளிந்தபாடில்லை.

எதையோ பறிகொடுத்தாற்போல மட்டும் உணர்ந்தவள் வேறு எதுவும் புரியாமல் ''எ... என்ன சா...ர்?'' என்று தடுமாறினாள்.

'ஷட்அப்'' என்ற அவனது சீறலில் அதற்குமேல் வாயை மூடிக் கொண்டாள்.

ஆனால் மனது வேலை செய்யத் தொடங்கியது.

என்ன நிகழ்ந்திருக்கக்கூடும் என்று எண்ணிப் பார்க்கையில நெஞ்சில் எதும்புக் கூட்டுக்குள் ஒன்றுமே இல்லாதது போல காலியாக உணர்ந்தாள்.

பாட்டியிடம் அல்வளவு கட்டுப்பாட்டில் வளர்ந்த அவள் இவ்வளவு கலபமாகத் தன்னை இழக்கக்கூடுமா?

பாட்டிக்கு மட்டும் தெரிந்தால்... அய்யோ!

ஒருவேளை வானத்திலிருந்து பாட்டி பார்த்திருப்பாரோ! விக்கித்துப் போய் அமர்ந்திருந்தாள் அவள்.

நீண்ட சாலைகள் குறைந்து மதுரையில் கலகலப்புடன்புகுந்து, ஒட்டல் வந்து சேர்ந்தது ஒன்றும் மனத்தில் படவில்லை.

''இறங்கு'' என்ற அவனது குரலில் விழுந்தடித்துக் கொண்டு இறங்கினாள்.

அவனது நிகைத்த தோற்றம் அவனுள் கோபத்தையே எழுப்பியது போலும்.

''ஏன் உனக்கு என்ன குறைவு நேர்ந்துவிட்டது. இப்படி 'பே' என்று விழிக்க? முகத்தை நன்றாகவே வைத்துக் கொள்ளலாம். பார்க்கப் போனால் அங்கே பல்லிக்கு வேறு கலபமாய் டிமிக்கி கொடுத்ததற்கு உற்சாகத்தில் துள்ளிக்கூடக் குதிக்கலாமே'' என்று எரிச்சலாகமொழிந்து விட்டு முன்னே நடந்தான் ஆனந்தன்.

''பெரிய பல்லி!'' என்று அலட்சியமாகத் தலையைக் குலுக்கிவிட்டு அவனைப் பின்தொடர்ந்தாள் வித்யா.

கொடைக்கானல் சம்பவத்தை அடிப்படையாகவைத்துக் கனவுகளை வளர்ப்பது தனக்கு நல்லதல்ல என்பதை வித்யா நன்றாகவே உணர்ந்தாள்.

இளவயதுள்ள இருவர் ஒரு வினாடி மயக்கத்தில் மிருக உணர்வுக்கு அடிமையானார்கள்; ஆனால் நல்ல வேளையாகத் தவறு ஏதும் நடக்குமுன் கய நினைவுக்கு வந்து விட்டார்கள்... அதாவது குறைந்த பட்சமாய் அவனாவது தன்னுணர்வு பெற்று விட்டான்.

இனி இதை நடவாதது போல மறந்து விடுவது இருவருக்கும்— அவனது நிலைக்கும் அவளது லேலைக்கும் நல்லது— என்ற முடிவுக்கு வித்யா வந்தாள்.

ஆனால் மறப்பதுதான கடினமாக இருந்தது.

கண்ணை மூடினால் அவனது கண்களில் லேசான சொரசொரப்பும், தோளின் நிண்மையும் நினைவு வந்து கொண்டே இருந்தன.

ஆனால் அவனால் எப்படி மறக்க முடிந்தது? சற்றும் அந்த நினைவே இல்லாதது போல் பழகுகிறானே!

அவனையே பின்பற்றியேதான் ஆக வேண்டும் என்று பிடிவாதமாய்த் தீர்மானம் செய்து, வெகு சிரமப்பட்டு அதைச் செயலாற்றவும் செய்தாள்.

மெல்ல மெல்ல வாழ்க்கை பழைய நிலையைச் சென்றடைந்தது.

கொடைக்கானல் பங்களா வேலை ஆனந்தனுக்குக் கிடைத்தது.

அது விஷயமாக அவன் அல்லப்போது அங்கேசென்று வந்தான்— தனியாகவே.

தனியாக என்றுதான் வித்யா நினைத்துக் கொண்டிருந்தான்— அன்று வரையில்.

அன்று ஒரு சனிக்கிழமை.

வியாழனன்று இரவே அவன் மதுரைக்கு—கொடைக்கானலுக்குச் சென்று விட்டான்.

அந்த மாதத்தில் மூன்றாவது விசிட். இன்னமும் அந்த 'புராஜெக்ட்' முடியுமுன் எத்தனை தரம் போவானோ என்று எரிச்சலோடு நினைத்தாள் வித்யா.

அலுவலோடு கலந்து ஆலோசியாது அவளாகவே செய்ய கூடிய 'ரொட்டீன்' வேலைகளை முடித்துவிட்டு மணியைப் பார்த்தாள்.

மணி பதினொன்று.

இனமும் அவன் வரவில்லை! இனி வருவான்என்றும் தோன்றவில்லை.

மறுநாளோ ஞாயிற்றுக்கிழமை.

ஆக, இனி நிக்கலன்றுதான் அவனைப் பார்க்க முடியும்.

அவன் இல்லாததால் அவளுக்கு வேலையும் அதிகம் இல்லை.

டைப்ரைட்டர், பென்சில், பாட், அவனுடைய மேசை, நாற்காலி எல்லாவற்றையும் பார்க்கையில்வெறுப்பாய் இருந்தது

சோம்பியிருப்பதில் சுகம்காணும் ரகம் தான் அல்ல! அதனால்தான் இவ்வளவு போரடிக்கிறது என்ற முடிவுக்கு வித்யா வந்தாள்.

தலை லேசு முணுமுணுவென்றது.

ஒரு காபி அருந்திவிட்டு வரலாம் என்று கீழ்த்தளத்தில் இருந்த கான்டீனுக்குச் சென்றாள் அவள்.

காபியானால் ஒரே கசப்பு!

சண்டை போட்டு சர்க்கரை கொண்டு வரச் சொல்லி கலந்தால் நாலு ஸ்பூன் சேர்த்த பிறகும் காப்பி கசந்தே வழிந்தது.

என்ன டிகாக்ஷனோ, என்ன காபியோ? இந்த கான்டீனில் காபி நன்றாயிருக்கும் என்று குடித்ததை நினைத்தாலே ஆச்சரியமாய் இருந்தது.

இந்த கான்டீனை நினைத்தே வேலையை விட்டு விடலாம்.

வெய்யில் லேசு மண்டையைப் பிளந்தே விடும் போல...

ஆத்திரத்துடன் வெளியே பார்த்தவள் கண்ணில் பட்டது, லேசுமாக வழுக்கிக் கொண்டு வந்து நின்ற அந்த வெண்ணிற டயோட்டா. ஓட்டி வந்தவன் ஆனந்தன்.

பிரமிக்கத்தக்க விதமாய் சூரியன் சந்திர கிரணங்களைப் பொழிந்தான். சிலுசிலுவென்று தென்றல் காற்று லேசு வீசத் தொடங்கியது.

"இன்றைக்கு நீங்கள் வருவீர்கள் என்று நினைத்தேன் சார். காலையில் வரும்போது பசுவும் கன்றுமாய்" ஆவலோடு முன்னே வந்த அவனைப் பார்த்து புன்னகை செய்த ஆனந்தன் நேரே அவள் பக்கம் வராமல் காரைச் சுற்றிக் கொண்டு சென்று மறுபுறக் கதவைத் திறந்தான்...

அவன் திறக்கும்வரை காத்திருந்து, திறந்த பின் நளினமாய் இறங்கி ஒயிலாய்போஸ்கொடுத்த அந்த இளம் பெண்ணைப் பார்க்கையில் வித்யாவுக்கு கரீல் என்று நெஞ்சுக்குள் எரிந்தது.

கூடவே, "இங்கே ரொம்பவும் வெயிலாயில்லை. அது? கொடைக்கானலில் லேசு என்ன எவ்வளவு சுகமாய்

இருந்தது'' என்று அவள் கூறவும் வித்யாவுக்கு மயக்கமே வரும்போல் ஆயிற்று

''எத்திராஜ் உன்னை வீட்டில் கொண்டு விடுவான் வீனா. அவனிடம் நான் நாளைக் காலை வருவதாகச் சொல்லு. வித்யா எத்திராஜை அழைத்து...'' என்ற ஆனந்தனின் பேச்சு அவள் காதுகளில் விழவே இல்லை. அவளுள் பிரளயமே நிகழ்ந்து கொண்டிருந்தது.

கொடைக்கானலா? கொடைக்கானலுக்கு ஆனந்தன் தனியே போகவில்லையா? இவனோடா சென்றான்.

அது என்று அழைத்தானே, அது என்ன அது? யார் அது? அதுகூடவா, அதுபவம்... ஓ ஆனந்தனின் செல்லச் சருக்கமா?

என்ன தைரியம் இருந்தால் ஆனந்தனை அப்படிக் கொஞ்சிக் கூப்பிடுவான்? யார் இவள்.

ஆனைப் பார்த்தால் ஒல்...லியாக ஈர்க் குச்சிக்குத் கரிதார் மாட்டிவிட்ட மாதிரி... ஈர்க் குச்சி இல்லை... ஆனாலும் அந்தப் பெண் ஒல்லிதான்.

''ஃபாஷன் என்று பட்டினி கிடந்து மெலிந்திருப் பான். நாக்கு ருசியாய் ஒரு நல்ல சாப்பாடு சாப்பிட்டி ருக்க மாட்டாள். கண்ணைப் பார், நிறந்து கொண்டே தூங்குகிற மாதிரி...'' என்று குமுறும்போதே அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று.

யாரையும் மட்டம் தட்டிக் குறைவாக எண்ணுவது அவனுக்குப் பழக்கம் இல்லையே. இவளை ஏன் பழிக்க வேண்டும் என்று வருத்தமாக நினைத்தபடி திரும்பினால் ஆனந்தன் ஏதோ சொல்லிக்கொண்டு இருந்தவன், நிறுத்தி விட்டு அவளையே குறுகுறுவென்று பார்த்தான்.

என்ன சொன்னான்?

வேறு வழியின்றித் திரும்பக் கேட்டான். கண்ணில் சிரிப்புடன் அவன் திரும்பச் சொல்லவும், ''இதோ வரச் சொல்லுகிறேன்.'' என்று அவசர அவசரமாய் உள்ளே சென்றாள்.

''சரியாகக் காது கோதவல்லாம் எல்லாம் ஏன் வேலைக்கு வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் அது? போகச் சொல்லுவதுதானே'' என்று அந்தப் பெண் கூறியது வெகு துல்லியமாய் வித்யாவின் காதுகளில் விழுந்தது.

ஆனால் அவளது பேச்சை விடவும் ஆனந்தனின் நிசப்தமே அவளை மிகவும் வருத்தியது.

அவன் மேலும் மனம் நோகும்படியாக, ''வித்யா'' என்று அலனை மீண்டும் அழைத்து, ''எத்திராஜனைக் காண்டீனுக்கு வரச் சொல். நாங்கள் காப்பி சாப்பிடப் போகிறோம். வா வீனா'' என்று அந்தப் பெண்ணுடன் காண்டீனுக்குள் சென்றான்.

'நல்ல கசப்புக்காப்பி நன்றாகக் குடியுங்கள். அடிவயிறு வரை கசந்து வழியட்டும்' என்று ஆத்திரமாய் நினைத்தபடி எத்திராஜைத் தேடிச் சென்றாள் வித்யா.

கூடவே இன்னொரு குழப்பம்.

காலையில் வெளியே இளம்புகையில் மாடும் கன்றும் எதிரே பார்த்தாளே ரொம்பவும் நல்ல சகுனம் ஆயிற்றே. ஒருவேளை பால்காரன் தூக்கிவைத்திருந்தது. லைக்கோல் கன்றுக்குட்டியா? நிஜக் கன்று இல்லையானால் பலன் மாறி விடுமோ?... பெயரைப் பார் லீ...னா! கண்ணராவி

இவளது நிம்மதியைக் கெடுக்கவென்றே வந்து தொலைந்திருக்கிறாளே...

அன்றோடு நில்லாமல் அந்த வீனா அடிக்கடி வித்யா வின் நிம்மதியைக் குலைத்து வேதனையைத் தந்து கொண்டேதான் இருந்தாள்.

அந்த சனி, ஞாயிறு இரண்டு நாட்களுமே வித்யாவுக் குச் சரியான தூக்கம் இல்லை

ஞாயிறு காலையில் அந்த வீனாவின் வீட்டுக்கு வருவ தாக ஆனந்தன் சொன்னானே.

ஏதாவது தொழில் ரீதியில் அந்த லீனாவின் தந்தையை பார்த்துவிட்டு உடனே திரும்பினானோ. லீவு நான் தானே என்று அங்கேயே கொட்டமடிக்கிறானோ?

என்னென்னவோ கற்பனை செய்து தன்னையே துன்புறுத்திக் கொண்டாள் வித்யா

ஆனால் மறுநாள் மனசுக்கு மிகவும் நன்றாகி விட்டது.

காலையிலேயே இடது கண் துடித்தது; சித்தி ஏதோ நிருமணத்துக்காக இனம்பியவள் பூவும் பொட்டும் பட்டும் நகையுமாய் அம்பிகையாய் எதிரே வந்தாள்; வேலைக் காரப் பெண் முன்புறம் 'பம்ப்'பில் பிடித்த குடிநீர்க் குடத்துடன் இலளைத் தாண்டினாள்.

ஏகப்பட்ட நல்ல சகுனங்கள்!

இவை எல்லாம் நல்லதுதான் நடக்கும். அந்த லீனாவின் பெயரே ஆனந்தனுக்கு அடியோடு மறந்துவிடப் போகிறது. நிச்சயமாய்.

உற்சாகமே உருவாக அவனைப் பார்த்ததுமே ஆனந்தன் கேட்டான் "உன் எதிர்வீட்டுப் பூனைகளை எல்லாம் கொன்று புதைத்து விட்டார்களா, வித்யா" என்று.

"இல்லையே" என்று மலர விழித்தவள் உடனே புரிந்து லேசாக வெந்து. "அதில்லை சார், ஆனால் இன்றைக்கு ஏகப்பட்ட நல்ல சகுனங்கள்" என்றுதொடங் கினாள்.

"உன் நாய், பூனை, பல்லியெல்லாம் அப்புறம் பார்க்க லாம். முதலில் வேலையைக் கவனிப்போம்" என்று கடு கடுத்தவன் அவளாகவே, "நேற்று லீனாவின் வீட்டில் நேற்றிரவு பழத்துக்குள் தேங்காய்ப்பூ பொதிந்து புது மாதிரியாக ஓர் இலிப்பு பஜ்ஜி செய்திருந்தார்கள். ஒரு பிடி பிடித்து விட்டேன் இன்றுகூடச் செய்து லைப்ப தாகச் சொன்னார்கள்" என்று பெருமையடித்தாள்.

பஜ்ஜி என்றால் மாலைவரை அங்கேதான் டேராவா? இன்று வேறு போகிறானாமா?

அதெப்படி? காலையில் இடது கண் துடித்ததேயித்தி... குடம்... நல்ல நல்ல சகுனங்களுக்கெல்லாம் நேர்மாறாக இவன் கெட்ட சேதிகளாகச் சொல்கிறானே.

'வே... வேலையைத் தொடங்கலாமா, சார்?" என்றான் அவன் சனகரத்தில்.

"தொடங்கலாமே" என்றான் அவன் உற்சாகமாக.

ஆனந்தனுடைய மனைவி என்ற இடத்தை அவன் அன்போடு தருவான் என்றால் சொர்க்கம்கூட வேண்டாம் என்று ஒதுக்கி விடுவான் வித்யா.

அவனுடைய கார், பணம் எதுவும் வேண்டாது என்றாலும் ஓர் ஒட்டைக் குடிசையிலாவது வாழ வேண் டும் என்றாலும்கூட இந்திர லோகத்தைவிட அவனுக்கு அதுதான் உயர்வு.

அப்படிக் கனவு கூட கண்டிருக்கிறாள்.

அவன் ரிக்ஷா ஒட்டி, மூட்டை தூக்கி ஐந்தே ரூபாய் சம்பாதிப்பதாகவும், அதில் ரசம்சாதம் செய்து அரை வயிறு உண்டு விட்டு, ஓலைக் குடிசையில் ஒட்டை வழியே வரும் நிலாக்கதிரை ரசிப்பதாக... ரசிப்பதாக—

அணைத்து மழை கொடைக்கானலும் கார் மெத்தை யுமா வேண்டும்? கட்டாந்தரைகூட சுகம்தான்.

ஆனால் இந்தக் கனவுகள் ஏதும் நடக்கக்கூடியவை அல்ல என்று அவள் தெரிந்தே இருந்தாள்.

அவன் திருமணம் ஆகாதவன் என்பதை அறியநேர்ந்த பிறகும் அவனுக்கு வேறு நம்பிக்கை வந்துவிடவில்லை; கொடைக்கானல் நினைவு அவ்வப்போது குறுகுறுத்த போதும்கூட அப்படித்தான்.

அவனுக்கு ஒரு கல்யாணம் காட்டி என்று பார்த்து விடத் துடிக்கும் உறவு ஏதும் இல்லாததால் சற்று நிம்ம யுடனேயே அவள் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

இந்தப் பொல்லாத ஞாயிற்றுக்கிழமை தவிர, மற்ற ஆறு நாட்கள்— நான் எட்டு மணிநேரம் அவளைப்பார்த்துப் பேசியபடி வேலை செய்தால் அது போதும்.

நிம்மதியோடு வாழ்க்கையை அப்படியே கழித்து விடலாம்.

வேறு எதுவும் வேண்டாம். தேவையில்லை என்று நினைத்திருந்தாள்.

அப்படியே வாழ்க்கையும் ஒருவாறு சலனமின்றிச் சென்று கொண்டுதான் இருந்தது.

ஆனால் இந்த லீனாவின் வருகையால் எல்லாம் குறைந்து போயிற்று.

அவள் இன்னொரு பெண்ணோடு கலக்கக் கூடும் என்ற எண்ணம் சகிக்க முடியவில்லை; ஏன் சிரித்துப் பழகுவதைக் கூடத் தாங்க முடியாமல் தவியாய்த் தவித்தாள்.

ஆனால் அவளது தவிப்பு அவனுக்குப் புரியவே இல்லை போலும். அடிக்கடி லீனா வீடு பற்றி அவளிடமே அளந்தான்.

அதுவும் என்றேனும் எதிர் வீட்டுப் பூனை, ஒற்றைக் காக்காய் என்கிற தொல்லைகள் இல்லாமல் என்றைக் காவது அப்பாடி. நல்ல சகுனம் என்ற நிம்மதியோடு அலுவலகம் சென்றால், அன்றைக்கென்று அங்கே லீனா புராணம் காத்திருக்கும்.

அன்று ஒருநாள் அதிசயமாய் வானத்தில் கருடனைக் கண்டு, கன்னத்தில் போட்டுக் கொண்டு சந்தோஷமாக வந்தான்.

ஒரு புருவ உயர்வில் என்னவென்று வினவியவனுக்கு விவரம் சொன்னாள். ''கழுத்தெல்லாம் வெள்ளையாய் கம்பீரமாய்ப் பறப்பதைப் பார்த்தேன் சார். ரொம்ப நல்லது என்று எங்கள் பாட்டி சொல்லியிருக்கிறார்கள். அங்கே பாட்டியோடு திருச்செந்தூரில் இருந்தபோது அடிக்கடி பார்த்திருக்கிறோம். இங்கே இன்றுதான் பார்க்கிறேன்'' என்றாள் மகிழ்ச்சியோடு.

''பக்கத்தில் எங்காவது கோழி வளர்க்கிறார்களோ என்னவோ? கோழிக்குஞ்சைத் தூக்கிச் சென்று கொன்று தின்ன எண்ணி வந்திருக்கும்'' என்றான் அவன் அவள் முகத்தைப் பார்த்து.

பின் வீட்டில் ஒரு வாரம் முன்பு பொரித்ததாகச் சொன்ன 'லெக்ஹார்ன்' கோழிக்குஞ்சுகள் நினைவுக்கு வந்தன அவளுக்கு. பஞ்சினால் செய்தாற்போல் மிருதுவாய் அழகாய் குடுகுடுவென்று ஓடிக்கொண்டு இவை களைக் கொன்று தின்னலா அந்தக் கருடன் வந்தது?

முகம் வாடிப் போயிற்று அவளுக்கு.

''யோசிக்காதே வித்யா. அது வருவதும் போவதும் அவற்றின் தேவைக்காகத்தான். மற்றபடி இந்தப் பூனை, நாய், தரிசாகம், கருடன் என்று இவைகளா நம் விதியை நிர்ணயிப்பது? பிறகு நம்முடைய அறிவுக்கும் வேலைக்கும் மதிப்பு ஏது?'' என்று கேட்டான் ஆனந்தன்.

ஒருகணம் தயங்கினாலும், ''இதற்கெல்லாம் அர்த்தம் இருக்கிறது சார். அதெல்லாம் எங்கள் பாட்டி நிறையச் சொல்லி இருக்கிறார்கள். இதெல்லாம் கடவுளாய் நமக்கு எச்சரிக்கை தருவதுதான். அதை அலட்சியம் செய்யக் கூடாது'' என்றாள் வித்யா தெளிவாகவே.

அவன் நிறுத்தினான். ''சரி சரி, உன் இஷ்டம். ம்... சொல்ல மறந்துவிட்டேனே. இன்று மாலை நான் சற்று சீக்கிரமாகப் போக வேண்டும், வித்யா. லீனாவை சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லியிருக்கிறேன். அங்கே செல்லுமுன் வீடு சென்று குளித்து விட்டு ஜம்மென்று டிரெஸ் செய்து கொண்டு போகலாம் என்று பார்க்கிறேன். அதனால் நாலரைக்கே நான் கையெழுத்து இடவேண்டிய கடிதங்களை முடித்து விடு'' என்று கூறி மேசை மேலிருந்த ஃபைலைப் புரட்டலானான்.

லீனாவோடு சினிமாவா?

அங்கே செல்லும்போது ஜம்மென்று டிரஸ் செய்ய வேண்டுமா?

நெஞ்சு கபகபவென்று எரிந்தது அவளுக்கு.

அத்தோடும் விடாமல், ''தல்ல சென்ட் ஆண்கள் பயன்படுத்துவது ஏதாவது தெரியுமா, வித்யா? எனக்கு சென்ட் பிடிப்பதில்லை. ஆஃப்டர் ஷேவ் லோஷனுக்கு மேல் எதுவும் பயன்படுத்துவது இல்லை. ஆனால் வீனாவுக்குப் பிடிக்கும். அதனால்தான் கேட்கிறேன்'' என்றான் தொடர்ந்து

அதற்குமேல் தாங்காமல் ''சென்டைப் பற்றியெல்லாம் நான் என்ன கண்டேன் சார்? அதெல்லாம் வீனா மாதிரி பணக்காரப் பெண்களுக்குத்தான் தெரியும்'' என்றாள் வித்யா குத்தலாக.

தலைநிமிர்ந்து அவளைப் பார்த்து, ''ஓ! ஆமாம். உண்மைதான் யோயொமல் உன்னிடம் கேட்டுவிட்டேன். சாரி'' என்ற அவன் அந்த 'சாரி'க்குப் பொருத்தாத விதமாய்ப் புன்னகை செய்தான்.

இன்னொருதரம் அந்த மாதிரி அவள் சிரித்து நின்ற போது வீனாவின் விலாசத்தைக் கொடுத்து ''மவுண்ட் ரோடில் 'கலடைன்கோப்' என்று ஒரு பூ பொக்கே கடை யிருக்கிறது! வீனாவின் வீட்டுக்கு சிவப்பு ரோஜா கொத்து ஒன்று அனுப்புப்படி ஆர்டர் கொடுத்துவிடு'' என்றான்.

சிவப்பு ரோஜா— காதலின் அடையாளம்! அப்படியென்றால்...?

'மொடைக்கானல் நினைவு அலலுக்குக் கொஞ்சம் கூடவா வராமல் போகும்?'

வித்யாவுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. கண்ணீர் வெளியே நிற்றிவிடாமல் தடுக்க அரும்பாடு பட்டாள்.

வெகு சிரமப்பட்டு சமாளித்துக் கொண்டு, ''சிலப்பு ரோஜாவா, சார்? மஞ்சள் ரோஜா நன்றாயிருக்குமே?'' என்று ஐடியா கொடுத்துப் பார்த்தாள்.

''இல்லையில்லை. வீனாவுக்குச் சிலப்புதான் பிடிக்கும்'' என்றான் அவன் இயல்பாக

''ரத்தக் காட்டேறிக்குக் கூடச் சிவப்புதான் பிடிக்கு மாம்'' என்று முணுமுணுத்தான் வித்யா.

''என்ன சொன்னாய் வித்யா?'' என்று அக்கறையாக வினவினான் ஆனந்தன்.

முணுமுணுத்ததை அப்படியே சொல்ல முடியுமா?

''அ...அது வந்து சிலப்பு ரோஜா... என்றால் அ... அர்த்தம் வேறே சொல்லுவார்கள்...'' என்று இழுத்தான்.

''என்ன அர்த்தம்? ஓ, காதல், அதுதானே தெரியும்'' என்றான் அந்தக் கல்லுளிமங்கன்.

மேலும் மேலும் அடிபட்டவனாய், அவள் டெலிஃபோனில் பூங்கொத்துக்கு ஆர்டர் செய்த பிறகு அவன் கேட்டான், ''என்னமோ, மாடு கன்று ஏதிரே வந்ததாகச் சொன்னாயே, அது பசு மாடா காளைமாடா வித்யா? பசு மாடுதானே நல்ல சகுனம்? அங்கே செல்லுமுன் எதற்கும் ஒரு பசு மாட்டை எதிரே கொண்டு வருமாறு ஏற்பாடு செய்து விடலாம் என்று இருக்கிறேன். செய்தால் எல்லாம் நல்லபடியாகத்தானே முடியும்'' என்று.

''எ...எது சார்!'' என்று அவள் நிலிலுடன் கேட்ட போது வெறும் முறுவலை மட்டும் பதிலாய்த்தந்து விட்டுப் போனான் அவன்.

பார்க்கவோ கேட்கவோ யாரும் இல்லாத எதிரியத்தில் ''பெரிய சகுனம் மண்ணாங்கட்டி'' என்று அழுகையும் ஆத்திரமுமாய் மொழிந்தாள் வித்யா.

வரவர நல்ல சகுனங்களைப் பார்த்தே பயப்படத் தொடங்கினாள் அவள்.

எதிர்வீட்டுப் பூனைகளிடம்கூட பிரியம் வந்துவிடும் போல் இருந்தது.

ஆனந்தன்கூட எதிர்வீட்டுப் பூனைகள் பற்றி அடிக்கடி விசாரிப்பான்.

எப்படியோ, பூனை எதிரே வந்த நினைவுகளில் வீனாவைப் பற்றிய பேச்சே இராது.

வீணாவாக டெலிபோன் செய்தால்கூட, பிஸியாக இருப்பதால் பிறகு பேசுவதாகச் சொல்லி விடுவான். தானே நேராகப் பேசுவதுகூட இராது.

இந்த சகுன விஷயத்தில் குழப்பம் வந்தாலும் மொத்தத்தில் வித்யாவுக்கு மனசு லேசாக இருக்கும்.

பல தினங்களாக வீணா பேச்சே இல்லாதிருந்தது.

அவளைப் பற்றிய பேச்சோ, அவளுடன் பேச்சோ, அவளுடன் சந்திப்போ வித்யா அறிய இங்கே நிகழாமல் இருக்கலாம்.

ஆனால் ஒரு நாளில் எட்டு மணி நேரம் உணவு, இடைவேளை எல்லாம் சேர்த்தால்கூட ஒன்பது மணி நேரம் தானே அவன் வாழ்வில் அவள் அறியும் நேரம்.

அதுபோக மீதி பதினைந்து மணி நேரத்தில் என்ன என்ன நடக்கிறதோ என்று அல்லல்போது வித்யாவின் மனம் கலங்கிப் போகும்.

ஆனால் கண்ணை மூடிக்கொள்ளும் பூனை போல மனதில் தலையைப் புதைத்துக் கொள்ளும் நெருப்புக் கோழியைப் போல அவள் அறிய அவர்கள் உறவாடாத வரையில் அவனுக்கு மனது இலகுவாக பாரம் இறங்கினாற் போலத் தோன்றும்.

ஆங்கிலத்தில் 'லீபூல்ஸ் பாரடைஸ்' என்பார்களே— அது போல இது ஒரு முட்டாளின் சொர்க்கம்தான்.

இந்த வீணா—இவள் இல்லாவிட்டா ஒரு மீனா என்று யாரோடு அவன் கற்றினாலும், ஏன் திருமணம்செய்தானும் கூட அதற்காக இவள் ஏங்க முடியுமே தவிர அது பற்றி ஒரு கேள்வி கேட்க அவளுக்கு ஏது உரிமை?

இந்த மாதிரி எத்தனித உரிமையும் அற்ற ஏக்கம் எந்த விதத்தில் உயர்வு என்று சில சமயம் வித்யா சோர்ந்து போவாள்.

இப்படி உள்ளூர உருக்கொண்டு இங்கே வேலை செய்வதைவிட வேலையை ஏன் விட்டுவிடக் கூடாது என்று கூட யோசித்தாள்.

ஆனால் ஒரு ஞாயிற்றுக்கிழமையே தாங்க முடியாதவளாக இருக்கையில் வாரம், மாதம் என்று அவனைப் பாராமல் இருப்பது சாத்தியமல்ல என்று உணர்ந்தாள்.

தன்னை அறியாமல் தன் உள்ளம் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில். வேளைதான் உலக முக்கியம் போல வெகு கவனமாக நடித்தாள்.

இவளது சகுனப் பைத்தியம் பற்றி எரிந்து விழாமல் தணிவாகவே ஆனந்த் சில சமயம் பேசுவான்.

ஒருநாள் ''கடவுளிடம் நம்பிக்கை இல்லாதபோது தான் இந்த மாதிரி அசட்டுத்தனம் எல்லாம் தோன்றும்'' என்று தொடங்கினான்.

''ஆங்... இல்லை சார், எல்தன் பாட்டி எப்படி சாமி கும்பிடுவார்கள் தெரியுமா? இருத்திகை, ஏகாதசி என்று ஆயிரம் விரதம் இருப்பார்கள், காலையில் சுப்ரபாதம் சொல்லாமல் காபிகூடக் குடிக்கமாட்டார்கள். அவர்கள் தான் இதையெல்லாம் எனக்குச் சொல்லித் தந்ததும்'' என்றாள் வித்யா

''பட்டினி கிடந்து சுப்ரபாதம் சொல்லி விட்டால் கடவுளிடம் நம்பிக்கை இருக்கிறது என்று அர்த்தமா? கடவுள் நமக்கு நல்லது செய்வார் என்கிற நம்பிக்கை வேண்டும். 'காட் ஹெல்ப்ஸ் தோஸ் ஹெல்ப் தெம் செல்ஃப்' என்பது தெரியும் இல்லையா? கடவுளை நம்பி நம் வேலையை நாம் செய்தால் எல்லாம் நன்றாகவே நடக்கும். கீதையில் கூட...''

அவனை இடைமறித்தாள் வித்யா ''அப்படி இல்லை சார் கடவுள்தான், இன்னின்ன நேரம் இது இதைச் செய்வது சரியில்லை என்று காட்டுவதற்காக சகுனங்களை ஏற்படுத்துகிறாராம். அதை மதிக்காமல் நடந்தால்

கஷ்டம் வரும் என்று எங்கள் பாட்டி நிறைய தடவை சொல்லியிருக்கிறார்கள்'' என்றாள் ஆணித்தரமாக.

நெடு அமைதிக்குப் பின் தோளைக் குலுக்கினான் அவன். ''ஒகே. உன் வாழ்வு உன் இஷ்டம்'' என்றான் விட்டேத்தியாக.

'என் இஷ்டமா? உன் கையணைப்பில் கிடப்பதுதான் என் இஷ்டம் என்றால் என்ன செய்வான்?' என்று எண்ணியபடி அவன் முகத்தை ஏக்கமாய்ப் பார்த்தாள் வித்யா.

பேப்பர் வெயிட்டை அழகு பார்த்திருந்தவன் நிடு மென விழிகளை உயர்த்தவும், அவசரமாகத் தரைவிடம் பார்வையைத் திருப்பினாள்.

ஒரு சின்னத் தயக்கத்தின் பின் ''வெல்... வித்யா எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டவன் அவள் தோட்டையும் பென்சிலையும் எடுப்பதைக் கண்டதும், ''ஆபீஸ் வேலை அல்ல'' என்றான்.

ஆச்சரியமாய் விழிகளை விரித்து, ''சொல்லுங்கள் சார்'' என்றாள் அவள்.

அழகாய் முறுவலித்து, ''ரொம்ப நல்ல சகுனம் தென்படுகிற நாள் பார்த்துச் சொல்லு. அன்றுதான் செய்ய வேண்டும். ஏனென்றால் இது ஒரு ஸ்பெஷல் வேலை'' என்றான் அவன் மர்மமாக.

அது என்ன வேலை என்று அவள் எத்தனையோ தரம் கேட்டும் அவன் ஒரு புன்னகையோடு மர்மக் கதை மன்னனாகவே இருந்து விட்டான்.

நல்ல வேளையாக அவளுக்குப்பைத்தியம் பிடிக்குமுன் அவன் கேட்டாற்போல ஒருநாள் அமைந்துவிட, தன் ஸ்பெஷல் வேலைக்காக அவன் அவளை அழைத்துச்சென்ற இடம் ஒரு நகைக் கடை.

''ஒரு பிரேஸ்லெட் வாங்க வேண்டும் வித்யா, எனக்கு நகை விஷயம் எல்லாம் சரியாகத் தெரியாது. நல்ல நிறம் கை... கொஞ்சம் மெலிசான கைதான்.

எதற்கும் சைஸ் அட்ஜஸ்ட் செய்கிற மாதிரியில் தேர்ந்தெடு'' என்றாள் ஆனந்தன்.

நட்டு நட்டாக வந்தவளற்றில் தேடிக்களித்து கடைசியாக இருவரும் ஒத்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து வாங்கிக் கொண்டு வரும்போது தான் அவளுக்கு உறைத்தது.

''இது... இது யாருக்கு சார்?'' என்று தன் கலக்கத்தை மறைத்துக் கேட்டாள்.

''என் வருங்கால மனைவிக்கு'' என்றான் அவன் குதூகலத்துடன்.

''மனைவியா...? திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா சார்?'' என்று அழாத குறையாகக் கேட்டான் வித்யா.

''பின்னே எனக்கும் வாரிசு என்று ஒன்று வேண்டாமா?'' என்றான் ஆனந்தன் உல்லாசமாய்.

நெஞ்சின் காயத்தை மேலும் கிளறுகிறோம் என்பது தெரிந்தும் விடமாட்டாமல், ''பெண் யார், சார்?'' என்று மேலும் விசாரித்தாள் அவள்.

லேசாகத் திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''அதை என்னிடமிருந்து தெரிந்து கொள்ளும் முதல் ஆள் நீயாகத்தான் இருப்பாய். அதனால் உன் ஆர்வத்தை அடக்கிக் கொண்டு சமயம் வரும்வரை பொறுத்திரு'' என்றவன் திரும்பிக் காரை ஓட்டலானான்.

அந்தக் குரலில் அவன் பேசிய பிறகு மேலே தூண்டித் துருவும் தைரியம் அவளுக்கு இல்லை.

ஆனால் அவன் சொல்லித்தான் அதை அவள் தெரிந்து கொண்டாக வேண்டும் என்பது இல்லையே.

இரண்டும் இரண்டும் என்ன என்று கூட்டி சரியான விடை காண ஒரு ராமானுஜம் தேவையில்லையே.

லீனாவுடன் கொடைக்கானல் சென்று வந்திருக்கிறான்? சிலப்பு ரோஜா பரிசு அனுப்பியிருக்கிறான்;

அவள் உடம்பு போலவே கையும் ஒல்லியாய்த்தான் இருக்கும், நிறமும் சரிதான்.

இவ்வளவு தெரிந்த பிறகும் அவள் கேட்டது தவறு தானே.

இன்னமும் எப்போது திருமணம் என்று தெரிந்து கொள்ள வேண்டும் போல உள்ளூர தவிப்பாய் இருந்தது.

அதையும் கேட்டு இன்னொருதரம் குட்டுப்பட விரும்பாததோடு 'நாளை' 'அடுத்த வாரமே' என்று ஏதும் சொல்லி விடுவானோ என்ற பயத்துடன் கூடப்பேசாதிருந்தான் அவள்.

ஆனால் அவன் பேசினான். "உன் சகுனங்கள் மேல் எனக்குக்கூட நம்பிக்கை வந்துவிடும் போல் இருக்கிறது. வித்யா. என்ன அருமையான பொருள் வாய்த்திருக்கிறது பார். அவள் கைக்கு ரொம்பப் பொருத்தமாய் இருக்கும்" என்று அருகில் இருந்த நகைப் பெட்டியை ஆசையாக வருடினான்—

பொல்லாத சகுனங்கள்! அவளை இவ்வளவு வேதனைப்படுத்தும் இவை நல்ல சகுனங்களா? இனி எந்த சகுனத்தையும் அவள் நம்பப் போவதே இல்லை சனியன்கள்!

பொங்கி வந்த ஆத்திரத்தையும் வெறுப்பையும் யாரிடமும் காட்டமாட்டாமல் சாலையை வெறித்துப் பார்த்தாள் வித்யா.

அன்றிலிருந்து தினமும் ஒருவிதமான நரக வேதனையை அனுபவித்தாள் வித்யா.

அலுவலகத்தில் அவள் உள்ளே வந்த வினாடியிலிருந்து அவனது திருமணம் பற்றி எந்த விதத்தில் அறிவிப்பானோ என்று அஞ்சியவாறே இருப்பாள். மாலையில், வேலை முடியும்வரை ஒரு கணம் தவறாது இதே அல்லல்தான்.

இந்தத் துன்பம் திடுமென ஒருநாள் முடிவு பெற்றது.

ஆனால் முடித்து வைத்தவன் ஆனந்தனல்ல. அவனுடைய சித்தப்பாவின் மூத்த மகன் நிலேபன்.

அந்த வீட்டில் ஒரு பழக்கம்.

ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டும் எல்லோரும் சேர்ந்துதான் உணவு அருந்த வேண்டும். கலந்து பேசியபடி உண்பார்கள். உணவும் கொஞ்சம் விருந்தாகத்தான் இருக்கும். அதனால் ஆறரை மணிக்கே சாப்பிட உட்கார்ந்து விடுவார்கள். அரட்டை அடித்தபடி உண்டு எழ ஒருமணி ஒன்றரை மணி நேரம் ஆகும்.

மற்றபடி பிள்ளைகளுக்கு வெகுவாக சுதந்திரம் கொடுக்கும் சித்தியின் கண்டிப்பான இந்த ஏற்பாடு வித்யாவுக்கு மிகவும் பிடிக்கும். குடும்பத்தில் வெறும் உறவு மட்டும் இல்லாமல் ஒருவருக்கு ஒருவர் தோழமையும் வளரும் அல்லவா?

அன்றும் அப்படித்தான்.

மைக்கேல் ஜாக்சனுடைய முகத்தில் எத்தனை தடவை பிளாஸ்டிக் சர்ஜரி செய்திருக்கிறார்கள்; அவன் முகம் முன்னே நன்றாயிருந்ததா. இப்போது நன்றாயிருக்கிறதா என்பதைப் பற்றி சித்தப்பா மக்கள் மூவருக்கும் ஒரே விவாதம்.

அடித்துக் கொள்ளாத குறைதான்.

சித்தி முகத்தில் புன்னகையோடு கலவித்துக் கொண்டிருக்க, இதில் கலந்து கொள்ளும் மூடு இல்லாமல் தட்டில் இருந்ததைப் பேசாமல் கொறித்துக் கொண்டிருந்த வித்யாவின் மேல் சுரேஷின் பார்வை விழுந்தது.

"நீ என்ன சொல்கிறாய் வித்தி? இப்போதுதானே ஜாக்சன் முகம் பார்க்க சகிக்கிறது." என்று அவளைத் தன் பக்கம் இழுக்கப் பார்த்தான்.

"இரண்டு முகமும் அன்னியமாய்த்தான் இருக்கிறது. ஆனால் பாட்டைப் பொறுத்தவரை அவருடைய 'பீட்இட்' பண்ண அவராலேயே இன்றும் முடியவில்லை" என்று விவாதத்தை மாற்றிவிட முயன்றாள் வித்யா.

அவன் பேசலும் சட்டென நினைவு வந்தவளாக "ஏய் வித்தி, இன்றைக்கு உன் பாகவுக்குக் கல்யாணமாமே" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் மூத்தவன் நிலீபன்.

குண்டாவது குண்டு—சரியான நியூக்ளியர் பாம்!

வறுவலை எடுத்த கை அந்தரத்தில் நிற்க, பேந்தப் பேந்த விழித்தாள் வித்யா.

"என்ன விழிக்கிறாய்? பர்சனல் செகரட்டரி என்று பெத்த பெயர். பெத்த உத்தியோகம். உனக்குக் கூடவா அழைப்பு இல்லை?" என்று ஆச்சரியமாய்க் கேட்டான் புலவர்.

"யார் ஆனந்தனுக்கா திருமணம்?" என்று இன்னொரு வித வியப்புடன் கேட்டார் அவனுடைய தகப்பனார்.

மூன்று நிமிடம் அலுவலகத்தில்... இல்லையே... சொல்லவே இல்லையே... வித்யா நன்றாக யோசித்துப் பார்த்தாள்.

ஊகும். அவன் சொல்ல வந்தது எதையும் தானாக நிறுத்தவும் இல்லை; வேறு எந்த வகையிலும் அவனது பேச்சு எதுவும் தடைபடவும் இல்லை.

நிலீபன் விளையாட்டுக்குச் சொல்கிறானோ என்று எண்ணியபோதும் நெஞ்சுக்கூடு காலியாகிப் போயிற்று.

அப்படித்தான் இருக்க வேண்டும் எல்லாம் வெறும் வேடிக்கை. ஆனந்தன் அப்படிப்பட்டவன் இல்லை.

அவன் கெடு நிமித்துடன் தன்னை சமாளிக்கமுயன்று கொண்டு இருக்கையில் நிலீபன் மேலும் பேசினான். "எப்படி அழைப்பார்? அவருக்கே தன் திருமணம் பற்றித் தெரியாதே" என்று இயம்பி எல்லோரையும் திகைக்க வைத்தான்.

"ஏய், என்னடா ஒரேயடியாய் உளறுகிறாய்?" என்று அதட்டினார் அவனுடைய தாயார்.

"அதுதானே" என்று ஆமோதித்தாள் வித்யா.

"நான் ஒன்றும் உளறவில்லை. எல்லாம் விவரமாகச் சொல்லுகிறேன். கேளுங்கள்" என்று எல்லோருடைய கவனத்தையும் முழுமையாகக் கவர்ந்து விட்ட பெருமையோடு விளக்கத் தொடங்கினான் நிலீபன்.

"என் சினேகிதன் அசோக்கைத் தெரியும் இல்லையா? அவன் பெசண்ட் நகரில் புதிதாகத் தொடங்கியிருக்கும் சீபைல் ஸ்டார் ஹோட்டல் தேவியில் உதவி மானேஜராக இருக்கிறான். அவனுக்கு இந்தப் பெண் வீனா உறவாம்."

'வீனா' என்ற பெயரில் அதிர்ந்தாள் வித்யா. 'அப்படியானால் நிஜமேதான்?'

வித்யாவின் அதிர்ச்சியைக் கவனிக்காமல் நிலீபன் தொடர்ந்தான்: 'நேற்று அசோக்குக்கு வீனா டெலிபோன் செய்தாளாம். நிங்களன்று தன்—அதாவது வீனா அண்டு ஆனந்தனுடைய திருமண ரிசப்ஷனுக்கு ஹால், சாப்பாடு எல்லாம் புக் பண்ணச் சொன்னாளாம். புக் பண்ணுவது என்றால் பக்கா ஆர்டர் இல்லையாம். டென்டேட்டில் இன்று திருமணம் நடந்தால் நானை வரவேற்பாம் "நடந்தால் என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டாள் அவனுடைய தங்கை.

"ம்...அதற்குத்தானே வந்து கொண்டு இருக்கிறேன். குறுக்கே குறுக்கே பேசி, எதையும் உருப்படியாகச் சொல்லி முடிக்க விடுவது இல்லை" என்று தங்கைக்கு ஒரு சின்ன டோஸ் விட்டு அவன் தொடர்ந்தான்.

"வீனாவின் 'உட்பி' இருக்கிறாரே— அதுதான் வித்யாவின் எம்.டி— அவர் சரியான விளாங்கு மீனாய் வழுக்கோ வழுக்கு என்று வழுக்குகிறாராம். வெளியே அல்வப்போது கூட்டிப் போவாராம், பூங்கொத்து அனுப்புவாராம்."

ரெட்ரோஸ் பூங்கொத்து என்று உள்ளூரச் சொல்லி அழுதது வித்யாவின் மனம்.

பெரியப்பா மகளின் மனம் அழுகை தெரியாமல் அலன் தொடர்ந்தான். "வீட்டுக்கே வருகிறாராம், போகிறாராம் ஆனால் திருமணம் என்றால் மட்டும் மிரட்டி மட்டும்தான் பதிலாம்..."

இலன் பிரேஸ்லெட்டைச் சொல்லவில்லையே அத்தோடு கொடைக்கானல் டிரிப் ஒன்று—அதாவது வித்யா அறிய ஒன்று...

"அதனால் அந்த லீனாப் பெண் இவரை மாட்டி வைக்க ஒரு நிட்டம் போட்டுவிட்டாள்" என்று கூறித் திரும்பவும் தங்கையின் கலவரத்தைக் கவர்ந்தான் நிலீபன்.

"அந்தத் நிட்டத்தை இன்றைக்கு..." என்று நிறுத்தி விட்டு நிதானமாக மீன் துண்டில் முள் நீக்கலானான்.

"என்ன நிட்டம்? என்ன நிட்டம்? இன்றைக்கு என்ன செய்யப் போகிறாளாம்?" என்ற மற்றவர்களின் பரபரப்பிலூடே வித்யாவின் பதைப்பும் அடிபட்டுப் போயிற்று.

மற்றவர்களின் ஆர்வம் கம்மா ஒரு பரபரப்பான கதை கேட்கும் அளவு மட்டிலும்தான்; வித்யாவுக்கோ இந்தப் நாறு அங்குல உடம்பின் உள்ளே இருந்த உயிரே ஆடிப் போயிருந்தது.

ஆனால் தன்னுடைய முகபாவத்துவத்தை நிலீபன் விடுவானா?

நிதானமாக மீனில் முள்ளெடுத்துச் சாப்பிட்டுவிட்டு, "அம்மா, அடுத்த தடவை மீனுக்குத் தொந்தரவு— இல்லாண்டு உப்புக் குறைத்துப் போடுங்கள்" என்று ஒரு லக்கினை சொல்லிவிட்டுத்தான், "ம்...எங்கே விட்டேன்?" என்று மீண்டும் விஷயத்துக்கு வந்தான்.

"உள்ளைக் கட்டிலைத்து உதைக்க வேண்டும்" என்று பொறுமினாலும், "லீனாவின் நிட்டப்படி இன்று..." என்று எடுத்துக் கொடுத்தாள் புவனா.

"இன்றைக்கு லீனாவின் அவர்— அதுதான் ஆனந்தன் அவளை மாலையில் எங்கேயோ வெளியே அழைத்துப் போகிறாராம்."

"எங்கேயோ இல்லை. சினிமாவுக்கு. இரண்டுடிக்கட் ரிசர்வ் செய்து கொடுத்ததே வித்யாதான்! ஆனந்த னுடைய உத்தரவுப்படி. இத்தேரம் சினிமா முடிந்து வீடு திரும்பியிருப்பார்கள். வீடு திரும்பினார்களோ, அப்படியே வெளியே எங்கேயும் போயிருக்கிறார்களோ..." நறுக்கெனத் தன்னையே நகம் அழுந்தக் கிள்ளிவிட்டுக் கொண்டு மீண்டும் நிலீபன் பேச்சைக் கவனித்தாள் வித்யா.

"லீனாவின் பெற்றோர் இல்லாத நேரத்தில் அவளை வீட்டில் இருப்பக் கொண்டுபோய் ஆனந்தன் விடும் போது... டட்ட டட்ட டட்ட டட்டாய்ஸ்..." என்று அடுத்த துண்டு மீனுக்குக் கை நீட்டினான் நிலீபன்.

அலன் கையில் பட்டென்று ஒன்றுபோட்டு, "இந்த இடத்தில் நிறுத்தினாயோ கொன்றுவிடுவேன்." என்று உறுமினான் கரேஷ்.

"அதையும்தான் பார்ப்போம்" என்று மேசைமேல் தானம் போடத் தொடங்கிவிட்டான் நிலீபன். இங்கே ஒரு பெண்ணின் உயிர் தூண்டில் மீனாய்த் துடிப்பது தெரியாமல்.

"நான் முள் எடுத்துத் தருகிறேன், சொல்லுங்கள் அண்ணா ப்ளீஸ்..." என்று கெஞ்சுதலாய் வேண்டிக் கொண்டபடி வித்யா அலசரமாய் ஒரு தூண்டில் முள் நீக்கத் தொடங்கினாள்.

"ம்... உனக்காகப் பார்க்கிறேன்' என்று தம்பியை ஒருதரம் முறைத்து விட்டுப் பெரிய மனது பண்ணிப் பேச்சைத் தொடங்கினான். "இன்று திரும்பி வரும் போது அவளை நைஸ் பண்ணி உள்ளே அழைத்துப் போவான் லீனா. அங்கே அய்யா, மஞ்சள், தாலி, ஹோமம், இதெல்லாம் போக சில குண்டர்கள் எல்லாம் தயாராக இருப்பார்கள். கதைகளில் படிப்போமே.

பெண்ணைத் தூக்கிப்போய்க் கட்டாயக் கல்யாணம் என்று. இங்கே பால் மாறிவிட்டது. நாது உதையில் மிட்டார் ஆனந்தன் வழிக்கு வந்துவிட மாட்டார்? என்ன வித்யா, என்ன?''

தன்னை அறியாமல் அலறிவிட்டாள், ''ல... வந்து மு...முன் குத்தி விட்டது'' என்று சமாளித்தாள்.

''அதுதான், கவனத்தை எங்காவது வைத்துக் கொண்டு முன் எடுத்தால் குத்திவிடும். அதற்காக நிறுத்தினால் சொல்லுவேன் அது இது என்று...'' தம்பிக்கும் ஒன்று கொடுத்தான் நிலீபன்.

இவன் சற்று நேரம் பேசாது இருக்கமாட்டானா என்று இருந்தது வித்யாவுக்கு. அவள் இப்போது என்ன செய்ய வேண்டும்! நிம்மதியாக யோசிக்கக்கூட முடியவில்லையே!

அவனது கலவரம் புரியாமல், ''ஆமாமாம், இவளது மிரட்டலில் பயந்து மணந்து கொள்வாராக்கும். அப்புறம் கண்ணே, கனிமொழியே என்று அவன் மேல் காதலாகிக் கசிந்துருகி ரிசப்ஷனுக்கு வந்து நின்று இளிப்பாராக்கும்.'' என்றாள் புவனா இளக்காரமாய்.

''நாமெல்லோரும் கேட்கிறோம் என்று சும்மா உல்டா விடுகிறார் பெத்த அண்ணனார்'' என்று தொடர்ந்து கூறிச் சிரிக்க வேறு செய்தாள்.

வித்யாவுக்கும் அப்படித்தான் தோன்றியது. சும்மா மிரட்டிக் கல்யாணம் செய்து கொண்டால் போதுமா? அப்புறம் வாழ்தான் பூராவும் சேர்ந்து வாழ்வது எப்படி? கொஞ்சம் தென்புவந்து நிமிரும்போதே அவளுக்கு ரோஜாப்பூ அனுப்பினானே, பிரேஸ்லெட் வாங்கினானே என்றுமீண்டும் கலங்கிப் போனாள்.

அவனாகவே அன்பு காட்டுகிறானே.

பிறகு ஏன் கட்டாயக் கல்யாணம்?

நிலீபன் பொய்தான் சொல்கிறான்.

''ஆனால் உல்டாவுமில்லை; பொய்யும் இல்லை. நான் சொன்னதெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை. நேற்று இரவு நான் வர நேரமாயிற்று அல்லவா? காரணம் அசோக்கின் அழுகைதான். சொத்தக்காரி; பணம் படைத்த குடும்பம்— சொல்லப்போனால் இந்தவேலையை வாங்கிக் கொடுத்ததே அவள் அப்பாதான். அவள் பேச்சை அலட்சியம் செய்யவும் முடியாது. அப்படியே துணிந்து அலட்சியம் செய்துவிட்டு, மறுநாள் விருந்துக்கு ஆட்களோடு அவள் வந்து நின்று விட்டால் அதுவும் ஆபத்து. பெரிய ஆர்டரை விட்டு விட்டாயே என்று மானேஜ்மெண்ட் தொலைத்துத் தலை முழுகி விடுவார்கள்.

''அப்படி இல்லாமல் இவளுடைய டெலிஃபோன் பேச்சை மட்டும் வைத்து ஆர்டர் புக் பண்ணி, விருந்து எல்லாம் செய்து வைத்து அவள் வராமல் கையை விரித்தால் அப்போதும் அசோக்கிற்குத்தானே ஆபத்து.

''புதிதாகக் கிடைத்த வேலை கிடைத்து ஒரு மாதத்திற்குள் பிளாக் மார்க்குடன் போய்விடும் போல இருக்கிறதே என்று அழுதான். அவனைத் தேற்றி தைரியம் சொல்லிவிட்டு வந்தேன்'' என்று முடித்தான் நிலீபன்.

''நீ சொல்வது உண்மையாகவே இருந்தாலும் குண்டர்களைக் கொண்டு அடிகொடுத்துத் தாலி கட்டச் சொல்லலாம். கட்டிப்பிடிப்பதற்கும் காதல் செய்வதற்கும் கூடவா குண்டர்களை வைத்து மிரட்டிக்கொண்டே இருக்க முடியும்? வெறுப்பவனை கல்யாணம் செய்து கொண்டு வாழ்நாளெல்லாம் வேதனைப்படுவதா? எந்தப் பெண் இதற்கு முயற்சிப்பாள்?'' என்று அவநம்பிக்கை காட்டி பேசினான் சுரேஷ்.

''ஷ்ஷ். கல்யாணம் ஆகிவிட்டால்தான் லைசன்ஸ் கிடைத்துவிடுமே. தனிமையில் கெஞ்சி, கொஞ்சி, அலுக்கி குலுக்கி என்னவோ சொல்லுவார்களே, மோகனாஸ்திரம்

என்று அதை விட்டால் ஆள் விழுத்துவிட்டுப் போல நான்'' என் தோளைக் குலுக்கினான் திலீபன்.

''ஆ...மாம். இவளுக்கெல்லாம் லைசன்ஸ் வேற வேண்டுமாக்கும்? அன்றைக்கு இவளைக் காட்டி நளினி சொன்னான். சரியான போதை மருந்து அடிக்ட். ஒரு டோஸ் பிரவுன் சுகருக்காக எத்தனை நடலை வேண்டு மானாலும் வரும்...'' என்றவன் ''புவனா'' என்ற தாயின் அதட்டலில் ''நளினி சொன்னதைத் திருப்பித்தானே சொன்னேன்?'' என்றான் விறைப்புடன்.

''பின்னே மயக்குவது மகச் சுலபம். அவளையும் அவனைப் போலவே 'பிரவுன் சுகர் அடிக்ட்' ஆக்கிவிட்டுப் போகிறான்... வித்யா!''

வித்யா எழுந்த வேகத்தில் சைனாக்ளே தட்டு கீழே விழுந்து உடைந்துதிதறியது. தட்டிலிருந்த உணவும்தான்.

''என்ன வித்யா இது?'' என்று முகம் சுளித்தான் சித்தி.

''சாரி சித்தி. நான் அவசரமாகப் போக வேண்டும்'' என்று வேகமாக ஓடிச்சென்று வாஷ்பேஸினில் கைகழுவினாள்.

''எங்கேடி இந்த நேரத்தில்?'' என்று ஆச்சரியமாய்க் கேட்டாள் சரகவதி.

''அவனிடம்... அவரைக் காப்பாற்ற வேண்டும்'' என்று ஓடிச்சென்று கைப்பையுடன் திரும்பி வந்தாள்.

''யாரை?'' என்றார் அந்த அம்மாள் புரியாமல்.

''அம்மா, இவள் மிஸ்டர் ஆனந்தனைச் சொல்லுகிறான் என்று நினைக்கிறேன்'' என்றாள் புவனா தன் ஒன்றுவிட்ட சகோதரியின் மனதை ஊகித்தவளாய்.

''ஆனந்தனை இவள் போய்க் காப்பாற்றுவதா? சிங்கத்தை கன்டெலி காப்பாற்றுகிற கதைதான்'' என்றான் கரேஷ் ஏளனமாக.

''வித்யா... இந்த நேரத்தில் வயதுப் பெண் எங்கே போகிறாள்...'' என்றாள் சரகவதி.

ஆனால் இருவருமே காற்றோடுதான் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களின் பேச்சுக்கு வித்யா அங்கே இல்லை.

வாயிலை அடைந்த வித்யா ஒரு கணம் நிதைத்தாள்.

ஆனால் உடனேயே நினைவு வந்தது. லீனாவின் லிட்டில் தானே விவகாரம் எல்லாம் நடப்பதாகத் திட்டம். அவளது வீட்டு விலாசம்தான் வித்யாவுக்குத் தெரியும்.

ஃப்ளோரிஸ்டிடம் அட்ரஸ் சொல்லி பூங்கொத்தை அனுப்பச் செய்யும் வேலையை ஆனந்தன் வித்யாவிடம் தானே ஒப்படைத்திருந்தான்!

அது மட்டுமா?

இருவருக்கும் சினிமா டிக்கட் புக்பண்ண வேண்டியதும் அவள்தான்.

அந்த லீனாவை அழைத்து வர கார் அனுப்பி ஏற்பாடு செய்யும் பொறுப்பைக்கூட அவளிடம்தான் அவன் கொடுத்தான்.

என்னவோ மனதில் உறுத்தியது.

ஆனால் அதை என்னவென்று நின்று நிதானித்து ஆராய்ந்து கண்டுபிடிக்க நேரம் இல்லாமல் அங்கே ஆனந்தனுக்கு ஆபத்து நேரமாய் இருந்தது.

பஸ்சுக்கெல்லாம் நின்று காத்திராமல் ஓர் ஆட்டோ ரிக்ஷாவைப் பிடித்துக் கொண்டு விரைய வேண்டும் என்று எண்ணித் தெருவில் அவள் காலடி எடுத்து வைத்தபோதுதான் அது நிகழ்ந்தது.

எதிர் வீட்டுச் செல்லப்பூனைகள் இரண்டு.

இரண்டும் கறுப்பு நிறம்.

காதலர்கள் போலும்.

இரண்டு கறுப்புப் பூனைகளும் ஒன்றுக்கொன்று ஒடிப் பிடித்து விளையாடும் வேகத்தில் வித்யாவின் மேல் வந்து விழுந்தன.

வித்யா நடுக்கிட்டாள்.

நெஞ்சு நடுக்கிட்டு மலைத்துப்போய் வித்யா நின்ற நேரம் அரை விநாடிக்கும் குறைவாகவே இருக்கும்.

அங்கே அவளுடைய ஆனந்தன் ஆபத்தில் இருக்கும் போது பூனையாலது எலியாலது?

நில்லாமல் ஓடிச்சென்று ஓர் ஆட்டோவில் ஏறி அமர்ந்து விலாசம் சொன்னாள்.

ஆட்டோ செல்லச் செல்ல அவளுள் ஒரே கலவரம்.

அங்கே போய் என்ன செய்வது?

உன்னை லீனாவிடமிருந்து காப்பாற்ற வந்தேன் என்று கூறுவதா?

அன்று அவள் தேர்ந்தெடுத்த பிரேஸ்லெட் நினைவு வந்தது

அவனே விரும்பி விட்டிருந்தால்—இங்கே ஏன் வந்தாய் என்று கேட்டால்...?

ஆனால் விரும்பியவனை மயிலைக்கக் குண்டர்கள் ஏன்?

நிமிர்ந்து அமர முயலும்போதே மனம் மீண்டும் தொய்ந்தது.

நாலு குண்டர்கள் என்றானே நிலீபன்.

போலீசில் சொல்லி நாலு போலீஸ்காரர்களை அழைத்துச் செல்வது நல்லதோ என்று யோசித்தாள்.

ஆனால் போலீஸ் ஸ்டேஷனில் என்னவென்று கூறுவது?

'ஆனந்தனை மிரட்டிக் கட்டாயக் கல்யாணம் செய்கிறார்கள்; தடுக்க வாருங்கள்' என்றா? சேச்சே...

பெண்ணுக்குக் கட்டாயக் கல்யாணம் என்றால் பரிதாபமாக இருக்கும். ஆனால் அதுவே ஆணுக்குக் கட்டாயத் திருமணம் என்றால் இளப்பத்துக்கு அல்லவா இடமாகும்?

ஆனால் நாலு குண்டர்களை எதிர்த்து வித்யா என்ன செய்ய முடியும்?

ஆவேரம் விதமாய் ஒடி ஒடி மனம் சலித்த போதும் திரும்பிவிடலாமா என்று மட்டும் அவளுக்குத் தோன்றவே இல்லை.

அங்கே ஆபத்தில் சிக்கி இருப்பவன் அவளுடைய ஆனந்தன் -ஆயிற்றே.

அவளுடைய ஆனந்தன் என்பதை அவன் ஒத்துக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் கூட இவளைப் பொறுத்தவரையில் அவன் அவளுடைய ஆனந்தனே தான்.

அந்த ஆனந்தனை ஆபத்திலிருந்து காப்பாற்ற அவள் அவன் இருக்குமிடம் சென்றே ஆகவேண்டும் என்று ஏதோ ஒன்று அவளுள் இருந்து வலியுறுத்தியது.

அவனையும் விரட்டி, அவள் மூலம் அந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவரையும் 'சீக்கிரம்' 'சீக்கிரம்' என்று விரட்ட வைத்தது.

ஆட்டோவை அனுப்பிவிட்டு உள்ளே விரைந்தவள், போர்டிகோவில் ஆனந்தனுடைய டயோட்டாவைக் கண்டு மனம் சோர்ந்தாள்.

நெஞ்சு கலங்க உள்ளே சென்று பார்க்கையில் அந்தப் பெரிய ஹாலில் ஒரு புறமாய் ஒதுங்கி வேலையாட்களோ அய்யரோ, கண்டபடி கிடந்த மங்களப் பொருட்களோ அவள் கண்களில் படவில்லை.

ஹாலில் ஒருபுறமாய் போடப்பட்டிருந்த சோபாக்களின் முன்புறமாய் நின்ற டீபாயிலிருந்து எதையோ

குனிந்து எடுத்துக் கொண்டிருந்த ஆனந்தன் அவள் பார்வையில் பட்டான்.

கூடவே, அந்த நொடியை வட்டமிட்டாற்போல் ஓடிய மாடி வராண்டாவின் சைப்பிடிச் சுவரில் வைத்திருந்த 'இண்டோர் பிளான்ட்' தொட்டி ஒன்றை எடுத்து, குனிந்திருந்த ஆனந்தன் மேல் வீசுகிற நிலையில் லீனாவும் தல்லி வேலையாகப் பட்டாள்.

மின்னலாய் விரைந்து ஆனந்தனை ஒதுக்கித் தள்ளி விட்டுக் கூடவே அவளும் விழுந்தாள்.

லீனா வீசிய தொட்டி அந்த ஹாலின்மேல் அழகாய்ப் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி மீது விழுந்து அதைச் சின்னாபின்னமாய்ச் சிதறடித்தது.

அப்புறம் அங்கே ஒரே களேபரம்தான்.

கீழே விழுந்தவர்களைத் தூக்கிவிட வேலையாட்கள் ஓடி வந்தனர்.

அதற்குள் லாவகமாக எழுந்துவிட்ட ஆனந்தன் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்குமாறு அவர்களைப் பணித்துவிட்டு மாடிக்கு விரைந்தான்.

முதல் தொட்டி தன் எண்ணத்தை நிறைவேற்ற வில்லை என்பதைக் கண்ட லீனா, அடுத்த தொட்டியை எடுத்து வந்தாள்.

அவளுடைய முகத்தை— முக்கியமாகக் கண்களைக் கண்ட வித்யாவுக்குத் திக்கென்றது

முதல் சந்திப்பிலேயே இவளுக்குத் தூங்குகிற கண்கள் என்று நினைவு வந்தது.

இந்த மருந்தைப் போய் ஏன் உண்ணுகிறார்கள்?

அடுத்த தொட்டியை எறிய லீனா இலக்கு தேடிக் கொண்டு இருக்கையிலேயே ஆனந்தன் அவளை நெருங்கி விட்டான்.

அவளிடமிருந்து தொட்டியை வலுக்கட்டாயமாய் அவன் பிடுங்கி எறிய, அவள் அவன்மேல் விழுந்து பிடுங்க, வித்யாவுக்கு எல்லாம் பிரமிப்பாய் இருந்தது.

அதற்குள் வாயிலில் வந்து நின்ற காரிலிருந்து இரு பெரியவர்கள்—லீனாவின் பெற்றோர் இறங்கி வந்தனர்.

''இனி இவளைக் 'கிளினிக்'கில் சேர்க்காமல் முடியாது அங்கிள். இந்த மாதிரிச் சம்பவங்கள் வெளியே பரவுவதை விட, கிளினிக்கில் இருந்து குணமடைந்தாள் என்கிற பேச்சு வருவது நல்லதுகூட. தயவு பண்ணி இனியும் காலம் கடத்தாதீர்கள்.''— அவளது அழுத்தமான பிடியிலிருந்து கைகளை விடுவித்துக்கொள்ள நிமிறியபடி வீறிட்டுக் கொண்டிருந்த லீனாவின் குரலுக்கு மேலாக அதன் கத்த வேண்டியிருந்தது.

அங்கே லீனாவின் கூச்சல்கள் பழக்கம்தான் போலும்.

லீனாவுடைய தாயாரும், வேலைக்காரர்களுமாக அவளைப் பிடித்துச் சென்றனர்

நெற்றி வியர்வையை விரல் நீரோடு சேர்த்து வழித்து எறிந்துவிட்டு, ''நீ சொல்வது சரிதான், ஆனந்த். இப்போது கூட அசோக் சொல்லித்தான் அவசரமாக 'ஓடி வந்தோம். என்ன பைத்தியக்காரத்தனம் பண்ண இருந்தாள் பார்... ஆனந்த். இந்த கிளினிக் விவகாரம் எல்லாம் கொஞ்சம் நீயே பார்த்துச் செய்யப்பா. என்... என்னால் தாங்காது. அவள் தாயாருக்கும் தாங்காது'' என்று மீண்டும் கண்ணீர் உகுத்தார் பெரியவர்.

மனவேதனை தந்த மிழட்டுத்தனம். மற்றபடி லீனாவின் பெற்றோர் இவ்வளவு முதியவர்களாக இருக்க முடியாது என்று நினைத்தான் வித்யா

பெரியவருக்கு ஆறுதலாகச் சற்றுநேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, வித்யாவையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான் ஆனந்தன்.

நிதி தூரம் பேசாமலே காரை ஓட்டியவன், நிமிடமென ''நீ இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டான்.

உள்ளூரத் தவிக்கத்துடனேயே அவள் விவரம் சொன்னாள்.

''ஓ காப்பாற்ற வந்தீர்களாக்கும்?'' என்று கிண்டலாகத் தொடங்கியபோதும், உடனே குரல் தணிந்து விட்டது. ''நீ வந்ததும் நல்லதாகிப் போயிற்று, வித்யா. ஆனால் வீனா அசோக்கிடம் பீற்றி, உன்னிடம் வந்த சேர்ந்த சேதிபோல இங்கே குண்டர்கள் யாரும் இல்லை. அவன் வீட்டுத் தோட்டக்காரன், கூர்க்கா, சமையல்காரன், எடுபிடிகள்... இவர்கள்தான். சம்பளம் கொடுப்பதால் தன் விருப்பம் போல ஆடுவார்கள் என்று செமித் தனமாய் நினைத்து விட்டான், முட்டாள் செமித்தனமான நிட்டமும்தான்.

''நான் இரண்டு அறைட்டில் போட்டதும் மிரண்டு போனார்கள், தன் எண்ணம் நடக்கவில்லை என்பதை உணர்ந்ததும் வீனா ரகளை பண்ணத் தொடங்கினாள் அவளை இழுத்துக் கொண்டு போய் அவள் அறையில் விட்டு விட்டு வந்தேன். வழக்கம் போலக் கொஞ்ச நேரம் அழுது விட்டுச்சரியாகி விடுவாள் என்று நினைத்தேன். ஆனால்...' ஸ்டியரிங்வீலில் இருந்து ஒரு கையை எடுத்து அவனது கையைப் பற்றி அழுத்தி, ''தாங்க்யூ. வித்யா. ஆனாலும் இந்தப் பெண் இந்த அளவு நிதானம் இழந்து போவாள் என்று நான் எண்ணவே இல்லை.'' என்றான் ஆனந்தன்.

வித்யாவுக்கு இப்போது மனம் குழம்பிப் போயிற்று.

இவன் பேசுவதைப் பார்த்தால் வீனாவின் மேல் அவனுக்கு வேறு மாதிரிப் பிரியமே இருந்ததில்லைபோல் தோன்றுகிறதே, ஆனால்...

மனதில் நினைத்ததை மறையாமல் கேட்டுவிட்டாள்.

''அவளுக்கு அந்த ஆசையை ஊட்டி வளர்த்ததும் நீங்கள்தானே, சார்? அடிக்கடி வெளியே அழைத்துச் சென்றீர்கள், பூங்கொத்து— அதிலும் வெப்பு ரோஜா— அனுப்பினீர்கள், பிரேஸ்லெட் வேறு, காதலை வளர்த்து விட்டுத் திடீரென்று இல்லை என்றால் ஒரு பெண்ணால் எப்படித் தாங்க முடியும்?''

'அந்த ஒரு கொடைக்கானல் அனுபவத்தையே மறக்க முடியாமல் நான் தவியாய்த் தவிக்கையில்...' என்று உள்ளூரச் சேர்த்துச் சொன்னது மனது.

சில கணங்கள் பேசாமலே காரை ஓட்டிய ஆனந்தன், மெல்லச் சொன்னான். ''இந்த விஷயம் எல்லாம் பிறகு சொல்கிறேன். ஆனால் முதலில் எனக்குப் பதில் சொல். இன்னமும் நீ இந்தப் பூனை, நாய், கழுதை, பல்லி எல்லாவற்றுக்கும் பயந்து பணிந்துதான் எதையும் செய்கிறாயா?'' என்று வினவினான்.

இம்புகையில் நடந்ததை நினைக்கையில் பக்கென்றிருப்பு வந்தது அவளுக்கு

''இல்லை'' என்று தலையை அசைத்தவள், ''சொல்லப்போனால் இன்று வீட்டை விட்டுக் கிளம்பும்போது... ஜூன், சித்திகூட எங்கே போகிறாய் என்றார்களே, அதைக் கவனிக்கவே இல்லை. நான் வாசலுக்கு வந்தால் இரண்டு கறுப்புப் பூனைகள் என் மேலேயே வந்து விழுந்தன. முன்போல என்றால் கயிறு கட்டி இருந்தால் கூட அதற்கு மேல் ஓர் அடி எடுத்து வைத்திருக்க மாட்டேன். இன்றைக்கு எனக்கு நிற்கக்கூடத் தோன்றவில்லை. சார்'' என்றாள் தன்னையே அதிசயித்தபடி.

''என்னவோ சார், ஒருகணம்கூடத் தாமதிக்காமல் செல்லவேண்டும். சென்று ஆனந்தனை...வந்து உங்களைத் தான் சார், காப்பாற்ற வேண்டும் என்று ஏதோ உள்ளே தோன்றிக் கொண்டே இருந்தது சார்'' என்றாள் தொடர்ந்து.

"குட்" என்றான் அவன் நிருப்தியோடு. "அதன் பெயர்தான் உள்ளுணர்வு என்பது. அதுதான் கடவுள் நமக்கு— மனிதர்களுக்கு அளித்திருக்கும் வரம். நமக்கு நல்லதை நாமாகவே செய்து கொள்ளும்படி கடவுள்சொல் கிறாராம். நாம் பின்பற்ற வேண்டியதும் அதைத்தான். மற்றபடி தன் தேவையினாலும் உடல் உபாதையினாலும் மிருகங்கள் கத்துவதையும், அங்கும் இங்கும் செல்வதையும் கணக்கிட்டு நம் காரியங்களை அமைப்பது..."

"முட்டான்தனம்" என்று முடித்தாள் வித்யா.

"நீங்கள் வீணா விஷயம் சொல்கிறேன் என்றீர் களே." என்றான் மீண்டும்.

அது தெரிகிறவரை அவனால் அமைதியாய் இருக்க முடியாதே.

லேசாக முறுவலித்து விட்டு அவன் தொடங்கினான். "வீணாவின் குடும்பம் ரொம்ப காலமாய் எங்களோடு நெருக்கமானது. என் தந்தை காலத்தில் இருந்தே நாங்கள் சேர்ந்தே வளர்ந்தவர்கள்தான். நான் ஒரு மத்தியத்தரத்து குடும்பத்துப் பெண்ணைத்தான் மணக்கப் போகிறேன் என்று அவளிடமே சொல்லியிருக்கிறேன். அங்கிளிடமும் கூறியிருக்கிறேன். எனக்கென்னவோ இந்தக் குடும்பங் களில் பிள்ளைகளை வளர்க்கும் விதமே பிடிக்கவில்லை. கட்டுப்பாடே இல்லாமல் வீணா போதை மருந்து எடுக் கிறாள் என்பது தெரிந்ததும் அங்கிள் என்னிடம் கேட்டுக் கொண்டார்— கேட்பதென்ன, கெஞ்சினார். 'அவள் மனம் கம்மாலே உற்சாகமாக இருந்தால் இதை தானா கவே நிறுத்தி விடுவாள். அதுவரை கொஞ்சம் அங்கே இங்கே அழைத்துப் போ, பேச்சோடு பேச்சாகப் புத்தியும் சொல்லு. என்றார்..."

"கொடைக்கானல் வரைக்குமா?" என்று தன்னை அறியாமல் கேட்டு விட்டான் வித்யா.

ஒரு பார்வையை அவன் மேல் செலுத்திவிட்டு அவன் பொறுமையாக பதில் கூறினான். "கொடைக்கானலுக்கு அவள் சென்றது அவளுடைய நண்பர்களோடு. திரும்பி வந்ததுதான், என்னோடு. வந்த பிறகுதான் எனக்கும் ஒரு காரியம் ஆகக் கூடும் என்று தோன்றியது. அதற்காகவே உனக்குத் தெரியாவே அவளோடு சென்றேன். அந்த ரெட்ரோன் பொக்கே அதை ஆர்டர் செய்த அளவில்தான் திலிப்பு ரோஜா. சென்றது வெறும் மலர்க் கொத்து. உன்னை அழ வைத்துவிட்டு ஆர்டரை நான் மாற்றி விட்டேன்..."

வித்யாவின் நெஞ்சு திடுமெனத் திடுதிடுக்கத் தொடங்கியது.

வீணாவுக்குத் தெரிந்து போய் விட்டதா?

"பார் வித்யா, நான் ஒரு பிஸினெஸ்மேன். ஏராளமாக நன்றாகவே தொழில் செய்கின்றவன்தான். தொழில் விஷயமாய் நான் அங்கங்கே செல்ல வேண்டியிருக்கும்; வர வேண்டியிருக்கும். இங்கே என் மனைவி பல்லி கத்திற்று, நாய் குரைத்தது, பூனை வந்தது என்று பயந்து என் வேலையைத் தடை செய்தால் எப்படி? தன் உடம்பைக் கெடுத்துக் கொண்டால் என்ன ஆகும்? சொன்னால் நீ ஒத்துக் கொள்வதாக இல்லை."

வித்யாவுக்கு கண் இருண்டு காது மந்தி புலன்கள் எல்லாம் என்னென்னவோ செய்தன.

தொடர்ந்த அவன் பேச்சு எங்கிருந்தோ கேட்டது.

"கொடைக்கானலில் இருந்து வீணாவோடு திரும்பி வந்தேனே, அன்றே உன் பார்வையிலேயே எனக்கு வழி கிடைத்து விட்டது. உன் நல்ல சகுன நாட்களில் எல்லாம் உனக்குத் தெரியும்படி வீணாவோடு பழகினேன். கெட்ட சகுன நாட்களில் மாறி நடந்து உன்னை மகிழ வைத்தேன்."

''ஓ!''

''ஆமாம். ரொம்ப 'ஓ'தான். ஆனால் இதற்கு மேல் கண்ணை விரிக்காதே. விழிகள் தெரித்துவிடப் போகின்றன'! என்று சிரித்தான் அவன்.

''பிரேஸ்லெட்டுக்கு மெல்லிய கையும் வெண்ணிறமும் அவனுக்கு மட்டும்தானா? உன் கையை நீ பார்த்ததே இல்லையா?'' என்றான் அவன் தனக்கே உரிய கிண்டல் தொனியில்.

நம்ப முடியாத பிரமிப்புடன் திரும்பி நன்றாக அவனைப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட நன்றாகவே பரவ விட்டு இருந்தான். ஆனாலும் அங்கங்கே ஒளி பரப்பிய சாலை விளக்குகளின் ஒளியில் அவனது முக வடிவம் நன்றாகவே தெரிந்தது.

அவளது பார்வையை உணர்ந்து, அவனும் திரும்பி தன் உறுதியான வெண் பற்கள் பளிச்சிட முறுவலித்து விட்டு மீண்டும் பார்வையைச் சாலையில் பதித்தான்.

என்ன கம்பீரமான காந்தச் சிரிப்பு!

தன்னுடைய அதிர்ஷ்டத்தை அவளால் நம்பக்கூட முடியவில்லை.

வீட்டை விட்டுக் கிளம்பியபோது எதிரே வந்து மேலே விழுந்த பூனைகளின் நினைவு வந்தது.

உள்ளே சென்று ஒரு கணம் அமர்ந்து தண்ணீர் குடித்துவிட்டு வந்திருந்தால்கூட என்ன ஆகியிருக்கும்?

இந்தத் தலையில் தொட்டி விழுந்து...

உடம்பு நடுங்க அவனை இரு கரங்களாலும் இறுக அணைத்துக் கொண்டாள்.

''ஹேய்... என்ன இது? பொறு பொறு'' என்று காரை இடப்புறமாய் ஒதுக்கி ஓரமாய் நிறுத்தினான்.

''இது... உன்னை அணைக்குமாறு எனக்கு அழைப்பா?'' என்றான் உதட்டில் ஒரு முறுவலுடன்.

''உங்களுக்கு விருப்பம் இருந்தால்'' என்றாள் அவள் சின்னதான குரலில்.

''விருப்பம்?''

சட்டென அவளருகே நகர்ந்து அவளை இறுக அணைத்து முத்த மழை பொழிந்தான் ஆனந்தன்.

அன்று கத்திய கட்டுக் குருவி போல இன்று எங்கோ தூரத்தில் சாலையில் கேட்ட கார் ஹார்ன் இருவரையுமே கவனிக்கவைக்குக் கொண்டு வந்தது.

அவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு விலகினான்.

அவன் தன் ஆடையின் அலங்கோலம் கண்டு மிரண்டு போய் அவசரமாகச் சீர்படுத்தலானாள்.

சில கணங்கள் பேசாமல் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் சொன்னான். ''என் விருப்பம் என்றாயே. அது இத்தோடு நிற்பது இல்லை. ஆனால் மற்றதை எல்லாம் திருமணத்தின் பிறகு வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். அல்விடத்தில் எப்படி உத்தேசம்?'' என்று வெண்பற்கள் ஒளிரக் குறும்பு நகையுடன் கேட்டான்

அவள் முகம் செந்தாமரையாய் மலர்ந்து அதன் நிறத்தையும் பூசிக்கொள்ள, அவனது பார்வையிலும் சிரிப்பிலுமாக மேலும் சிலந்து அதை மறைக்க அவன் தோளிலேயே முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

பார்வை களிய அவள் தலையை ஒருதரம் வருடிவிட்டு காரை எடுத்தான் ஆனந்தன்.

❀